கடவுள் துணை.


# செந்தமிழ்

தொகுதி-௧௩.] ராக்ஷஸ ஸ்ரீ ஆவணி மீ [பகுதி-௧0.

Vol. XIII. August—September, 1915. No. 10.


## ருதுமதீவிவாஹமும்; அதன் பராமர்சமும்.

### (1) ருதுமதீவிவாஹம்.

இத் தென்னிந்தியாவிலுள்ள இந்துக்களிற் பிராமணர்கள் எல்லாவகுப்பினரும், இதரஜாதியார்களிற் சிலவகுப்பாரும், தங்கள் பெண்களை ருதுவாவதற்குமுன்னமேயே மணம்செய்துகொடுப்பது என்கிறவழக்கத்தை நீடித்தகாலமாக அநுசரித்துவருகிறார்கள்.

---

### பராமர்சம்.

(1) இந்த "ருதுமதீவிவாஹம்" என்னும் விஷயப்ரவசனமானது பெரியகுளம்வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ M. R. ஸ்ரீநிவாஸையரவர்களால் வெகுதூரம்பரியாலோசித்து ஆசாரத்திருத்தவிஷயங்களினின்றும்சிரியதென்றுதெரிந்தெடுக்கப்பட்டதாய்ப் படிப்பவர்மனதிற்பதியும்படி விஸ்தரித்தெழுதப்பட்டுவருகிறது.

இது, நம் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்குப் பொருத்தமில்லாததென்று சிலர் நினைக்கக்கூடியதாயிருந்தபோதிலும், பரதகண்டமுழுதும்பரவிய இந்துமதத்தினர்க்கெல்லாம் நன்மையுண்டாக்கவிரும்பிய நன்னோக்கத்துடன் விரைவிற்சட்டமாக்கிக்கொள்ளவேண்டுமென்று அபிப்பிராயப்படும்விஷயமென்றுதோன்றுவதால், இதன் சாதகபாதகங்களையும், சாஸ்திரதாற்பரியங்களையும் தக்கமேதாவிகளும் பண்டிதர்களும் பரியாலோசனைசெய்து நன்மையும் உண்மையுமுள்ள ஒரு பக்ஷத்தில் எல்லோரும் ஒன்றுபட்டிசைய உபகாரமாகுமென்னுங்கருத்தால் இடையிடையே பத்திராதிபர்க்குத்தோன்றும் அபிப்பிராயமும் பராமர்சமென்னும்பெயருடையதாய்க் கீழேகுறிக்கப்பெற்று வெளியிடப்படுகிறது.

அதனால் அநேககெடுதல்களுண்டென்றும்,ப்ரௌடையானபிறகு பெண்களுக்குக் கல்யாணம்செய்வதாயிருந்தால் அதனால் (2) அநேக நன்மைகள் ஏற்படுமென்றும் பரியாலோசனைபண்ணி அப்படிச்செய்யப் பிரியமுள்ளவர்களுக்கு ஷை கல்யாணம் சட்டப்படிசெல்லாதென்றுவது அக்கல்யாணத்தின்மூலமாகப்பிறக்கிறகுழந்தைகளுக்கு மற்றக்குழந் தைகளொப்பந்தம் வார்சுக்கிரமப்படி சொத்துக்களையடையப் பாத்திய மில்லையென்றுவது ஏற்படாமலிருக்கும்பொருட்டு, ருதுமதீவிவாஹம் சட்டப்படி செல்லத்தக்கது என்று ஒருசட்டம் ஏற்படுத்துவதற்காக மதராஸ் சட்டநிரூபணசபையில் கனம் வி. எஸ். ஸ்ரீநிவாசசாஸ்திரி அவர்களால் ஒருமசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம்.

ஷை மசோதாவிஷயமாய் எல்லாஊர்களிலும் விசாரணையும், ஆக்ஷேபசமாதானங்களும் ஏற்பட்டு, அவைகள் மீட்டிங்குகள்மூலமா யும் பத்திரிகைகள்மூலமாயும் விவகரிக்கப்பட்டுவந்திருக்கின்றன.

மேலேவிவரித்திருக்கிறகாரணங்களினால், ருதுமதீவிவாஹம் அவ சியமென்றுநினைத்தபோதிலும் அதைச் சர்க்கார்மூலமாகச் செய்து கொள்ளவேண்டுமா? நாமேசெய்துகொள்ளக்கூடாதா? என்கிறவிஷயத் தைப்பற்றிப் புத்திமான்கள் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள்.

நம்முடையதேசத்தில் மகான்களாகிய ருஷிகள் ஆதியில் ஸ்மிருதி கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது நம்முடைய மடாதிபதிக ளும், சாஸ்திரிகளும் இருந்து ஒருவிஷயத்தை மனதில் ஏற்கனவே தீர்மான அபிப்பிராயமாகவைத்துக்கொள்ளாமல், சாதகபாதகங்களை

---

(2) பலதேசங்களிற்பரவியிருக்கும் விவேகம்நிறைந்த ஒரு கூட் டத்தாரால் வெகுகாலமாய் அநுஷ்டிக்கப்படாதுவிட்டிருக்கும் ஒரு புதியவழக்கத்தை ஸ்தாபிக்கப்புகுவதால்,பிரகிருதவிஷயத்தில்,"பிரௌ டாவிவாஹத்தால் அநேகநன்மைகளேற்படு"மென்றுமட்டும் சொல்வது போதாது ! மனிதர்விரும்பும் ஒவ்வொருவிஷயத்திலும் நன்மைதீமைக ளிரண்டுமேவிரவிக்கிடப்பதால் விவாதவிஷயமானஇருவகைவிவாஹங்க ளுள் ஒவ்வொன்றிலுமுள்ள நன்மைகளிவை, தீமைகளிவையென்று சாமான்யஜனங்களு மறிந்துகொள்ளும்படி தேசபாஷையில் வியக்தமா யெழுதிவெளியிடப்பட்டபுஸ்தகங்களைக் காட்டவேண்டும். காட்டினால்

யோசித்து ஒருஅபிப்பிராயத்துக்குவந்தால் அதை அநுஷ்டானமாக நாம் எல்லோரும் அநுஷ்டிக்கலாம்.

ஆனல், பிரகிருதஸ்திதியில் அது கொஞ்சமேனும்சாத்தியமில்லையென்பது தெளிவானவிஷயம். (3) இப்படிப்பட்டவிஷயங்களைப்பற்றிப் பேசுவதற்காகக் கூட்டப்பட்ட பரிஷத்துக்களினுல் ஒருபயனும் ஏற்படவில்லை, ஏற்படக்கூடியதாகவும் இல்லையென்றுதோன்றுகிறது.

தானகவே அநுஷ்டானங்களின்மூலமாக வரவரச் சீர்திருத்தங்கள் தேசத்தில் ஏற்பட்டு,அவைமூலமாக ருதுமதிவிவாஹம் முதலியவிஷயங்கள் இத்தேசத்தில் அநுஷ்டானத்துக்குவந்துவிடுமென்று சிலர்சொல்லுகிருர்கள். அப்படிச்செய்வதாயிருந்தாற் கட்டுப்பாடு என்பது இல்லாமல் அவரவர்கள் இஷ்டப்படி நடபடிக்கைகள்நடத்திக்கொள்வதற் கிடமுண்டாய்விடும். அதனுல், இப்பொழுது ஏற்கனவே ஹிம்சைகளுக்குக்காரணமாயிருக்கிற பலஜாதிப்பிரிவுகளுக்குள் இன்னும் ஜாஸ்தியான

---

அவற்றைப்பார்த்து நன்மையுள்ளகக்ஷியில் ஜனங்கள் ஏகீபவித்துநிற்பதற்கு எளிதாயிருக்குமென்றுதோன்றுகிறது.

---

(3) இப்படிப்பட்டவிஷயத்தைப்பற்றிப்பேசுவதற்காகக்கூட்டப்பட்டபாரிஷதரால் ஒருபயனும் ஏற்படவில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. கூடியபாரிஷதர் எடுத்துக்கொண்டவிவாதவிஷயத்தைப் பரியாலோசித்துநிர்ணயிக்கத்தக்கோராய்வந்திருந்தால், பிரதிகூலகக்ஷியை நிரசித்து அநுகூலகக்ஷியின் அபிப்பிராயத்தை யுறுதிப்படுத்தியிருப்பார்களாகையாற் பயனேற்பட்டேயிருக்கவேண்டும். பயனேற்படவில்லையாயின், பரிஷத்தாற் பயனேற்படவில்லையென்றுசொல்வது பொருந்தாது. கூட்டினேர்குறையென்றே கொள்ளவேண்டும். அல்லது ஏற்கனவே ஒரு அபிப்பிராயத்தைத் தீர்மானமாக மனதில்வைத்துக்கொண்டிருப்போமானல், பாரிஷதாதீர்மானம் நியாயமுள்ளதாயிருந்தாலும், அது எதிர்க்ககூஷியில்நிற்குமானுற் பயனற்றதாய்முடியும். ஆகையால், பிரகிருதவிஷயத்திற் பாரிஷதர்கூட்டம் எந்தவிதத்தாற்பயனற்றதாயிற்றென்பதையோஜித்துப் பயன்படும்வழியில், திரும்பவும்கூட்டவேண்டும். எடுத்துக்கொண்டவிஷயமானது, வெவ்வேறுபாஷைகளையும், வெவ்வேறுகோள்கைகளையும் உடையராயிருக்கச்செய்தேயும்

உட்பிரிவுகளும் கக்ஷிகளும் ஏற்பட்டு, ஹிந்துமதத்துக்கு ஏற்பட்ட தர்மம் இன்னது என்பது வியக்தமாயில்லாமலும், ஸ்மிருதிகள் முதலியவிதிகளுக்கு ஜனங்கள் கட்டுப்படாமலும் குழப்பம் ஏற்பட்டு இந்துமதமே சீர்குலைந்துபோய்விடுமென்றுதோன்றுகிறது.

அப்படிச் சீர்குலைந்துபோவதைவிடச் சாதகபாதகங்களையோசித்துச் சர்க்கார்மூலமாக மிகவும் அவசியமானகாலங்களிற் சட்டங்களை ஏற்படுத்திக்கொள்வது பாதகமில்லையென்றுதோன்றுகிறது.

இப்பொழுதுகொண்டுவரப்பட்டிருக்கிற ஹிந்துருதுமதீவிவாஹ மஸோதாவில், "ஹிந்துலாவிதியில் வேறுவிதமாகச்சொல்லியிருந்தபோதிலும் ருதுமதிவிவாஹம் சட்டப்படி செல்லாததாகமதிக்கத்தக்கதில்லை" என்பதுமுதலிய விதானங்களைச்சேர்த்திருப்பதில் அவ்வளவு விஸ்தாரமானபதங்களைப் பிரயோகிப்பது உசிதமில்லையென்றுதோன்றுகிறது.

---

பரதகண்டமுழுதும்பரவிய விவேகமுள்ள உயர்ந்தவகுப்பாரெல்லோராலும் நீடித்தகாலமாய் வித்தியாசமில்லாமல் அநுஷ்டிக்கப்பட்டுவரும் ஆசாரத்தைத்திருத்தும் பெரியவிஷயமாயிருப்பதால் விஷயகௌரவத்துக்கேற்ப ஆசேதுஹிமாசலமாகக் கிராமங்களிலும் நகரங்களிலும் தக்கோராய்ப் பிரஸித்திபெற்ற தர்மக்ஞர்களாயும், சாஸ்த்ரக்ஞர்களாயும், சதாசாரசீலர்களாயும் உள்ள ப்ராமாணிகர்களைப் பாரிஷதர்களாகக்கூட்டி ஆலோசிக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

மேலும் உபயகக்ஷியிலும் சித்தித்திராததொன்றை (அதாவது: ஒரு கிராமநிர்மாணத்திற் புதிதாய்க்கட்டும் தெருவைக் கிழமேலாய்க்கட்டலாமா? தென்வடலாய்க்கட்டலாமா? என்பதுபோன்றவிஷயத்தை) நிச்சயிப்பதற்கே, சபையோருட் பாதிக்குமேற்பட்ட பெரும்பாலாரபிப்பிராயம்வேண்டுமென்பது வழக்கத்திலிருப்பதால், இப்போது உபயகக்ஷியிலும் அநுபவசித்தமாயுள்ள (அதாவது: வெகுகாலமாய்க் கிழமேலாயிருந்துவந்திருக்கிறதெருவையழித்துத் தென்வடலாய்க் கட்டுவோமா? வேண்டாமா? என்பதுபோன்ற) கந்யாவிவாஹத்தைவிட்டு ருதுமதீவிவாஹத்திற்பிரவிர்த்திப்போமா? வேண்டாமா? என்றவிஷயத்தைநிச்சயித்து, அநுபவசித்தத்தைமாற்றும்பக்ஷத்தில் குறைந்தஅளவு நான்கில் மூன்றுபங்குக்குமேற்பட்ட பாரிஷதரபிப்பிராயமிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

ஏனென்றால் ஆதிமுதல் நமது ஆங்கிலேயராஜாங்கத்தார் கூடிய மட்டும் மதசாஸ்திரங்களுக்குவிரோதமில்லாமல் நமக்குச் சட்டம் ஏற்படுத்தி அரசாட்சிசெய்வதாகச்சங்கற்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப்பிரகாரமே கோர்ட்டுகளிலும் நியாயம் அளிக்கப்பட்டுவருகிறது. அப்படியிருக்க "ஹிந்துசட்டம் எப்படியிருந்தபோதிலும்" என்று சொல்லுவது இனிமேல் ஹிந்துசட்டத்தை அவமதித்தே சட்டங்கள் செய்யலாமென்று எல்லாரும்வியவகரிக்க ஒருபெரிய ஆதரவாக ஏற்படக்கூடுமென்று நான் பயப்படுகிறேன்.

மேற்கண்டபடி எழுதியிருப்பதை எடுத்துவிட்டு "ருதுமதிவிவாஹ விஷயமாக (4) இந்துஸ்மிருதிகள் ஒரேவிதமாக அபிப்பிராயப்படாததனாலும், ஒருஸ்மிருதியாவது அப்படிப்பட்டகல்யாணத்தை வர்ஜிக்கத்தக்கதென்றுதள்ளுபடிசெய்யாததனாலும் ஷை கல்யாணம் ஹிந்து சாஸ்திரசம்மதமா என்கிறவிஷயத்தைப்பற்றிச் சந்தேகங்கள் ஏற்படுவதால் ஷை சந்தேகத்தைநிவிர்த்திக்கும்பொருட்டு" என்று மாற்றி எழுத வேண்டுமென்றுதோன்றுகிறது.

---

அல்லாமலும், இத்திருத்தத்தால் ஸ்திரீகளுக்கு அதிருஷ்டபலத்தையெண்ணாவிட்டாலும், அவர்கள் விவாஹஸம்ஸ்காரத்தால் பால்யத்திலேயே அடைந்துவந்திருக்கிற த்விஜன்மமென்னும் பழையமேட்டுமையாகிய திருஷ்டபலத்தை ருதுமதியாகும்வரை சிலகாலமிழந்திருந்து பின் புதியமேட்டுமை (சிவிலிசேஷன்) அடையவேண்டியவர்களாயிருப்பதால், அவர்களபிப்பிராயங்களையும் ஊர்தோறுங் கூட்டங்கூட்டிக் கேட்டறியாது நாமே பலாத்காரமாய்ச்செய்வதும் நம் புதியமேட்டுமைக்குப் பொருந்தியதாவென்பதும் யோசிக்கவேண்டும்.

---

(4) "ஹிந்து ஸ்மிருதிகள் ஒரேவிதமாக அபிப்பிராயப்படாததனாலும்" என்று சட்டமசோதாவைத்திருத்துவதும் ஆலோசித்துச் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. ஏனெனில் ஸ்மிருதிகளெல்லாம் வேதோபப்ருஹ்மணம் (வேதத்தின்வியாக்கியானம்) என்றும், அவையெல்லாம் பிரமாணங்களென்றும், பின்னபிப்பிராயங்களில்லாதனவென்றும், ஒரேவிதமானஅபிப்பிராயங்களேயுள்ளனவென்றும் சாஸ்திரஞர்களான பிராமாணிகர்கள்சொல்லக்கேட்டிருக்கிறேன். சில இடங்களிற் கேவலவ்யுத்பன்னர்க்குச் சில ஸ்மிருதிவாக்கியங்கள் ஒன்றற்கொன்று

நம்முடையசாஸ்திரங்களுக்கும் ஆதிமுதல் ஏற்பட்டுவந்திருக்கும் அநுஷ்டானங்களுக்கும் முற்றும்விரோதமாகஇருக்கிற விதவாவிவாஹ விஷயமாக ஏற்பட்டிருக்கும் பூர்வபீடிகை(Preamble)ஹிந்துமதத்தின் விதிகளின் உண்மையானதாத்பரியத்தை அநுசரித்துச் சட்டம் ஏற்படுத்துகிறதாகச் சொல்லுகிறது. அப்படிப்பட்டசட்டமே சாஸ்திர தாத்பரியத்தை அநுசரித்துவருவதாகப் பாவனைபண்ணிக்கொண்டு

---

மாறுபட்டஅபிப்பிராயமுடையனபோலத்தோன்றுகின்றன. அவற்றிற்கெல்லாம் சாஸ்திரக்ஞர்களான பண்டிதர்கள், சாஸ்திரார்த்தங்களை நிச்சயிப்பதற்கென்றேற்பட்டுள்ள நியாயப்ரவிர்த்திகளாலும், உத்ஸர்க்காபவாதலக்ஷணங்களாலும், சாவகாச நிரவகாச ஸாமர்த்தியாதி லிங்கங்களாலும் அபிப்பிராயபேதமில்லாதனவாகவே அர்த்தம்சொல்லுகிறார்கள். அப்படி அர்த்தம்சொல்லும் மார்க்கமானது அவர்களாற் கற்பித்துக்கொள்ளப்படுவதில்லையென்பதும்,சாஸ்திரசித்தங்களாகவேயிருக்கின்றனவென்பதும் நன்கு அறியலாம். அந்தமார்க்கங்களைச் சாஸ்திரங்களும், ஸ்மிருதிகளும், வேதங்களும் அவலம்பித்திருப்பதால் அந்த வழியில் அர்த்தம்பண்ணும்பொழுது ஹிந்துசாஸ்திரங்களெல்லாம் ஒரே அபிப்பிராயமுடையனவாதலன்றிச் சிறிதும் பின்னபிப்பிராயமுடையனவாகக் காணப்படுவனவல்ல. ஆகையால் "ருதுமதீவிவாஹவிஷயமாக ஹிந்துஸ்மிருதிகள் ஒரேவிதமாக அபிப்பிராயப்படாததனாலும்" என்று சட்டமசோதாவைத்திருத்துவதும் பொருந்தாதென்றுதோன்றுகிறது.

அன்றியும், "இந்துலா எப்படியிருந்தபோதிலும்" என்றெழுதுவதையேஸஹியாத நாம் "இந்துஸ்மிருதிகள் ஒரேவிதமாய் அபிப்பிராயப்படாததனால் என்று எழுதிவிடுவோமானால், இந்துசாஸ்திரங்களில் அலக்ஷ்யபுத்தியுண்டாய்ப் பிரகிருதத்தில் நமக்கு அங்கீகாரமில்லாததாய்க் கொள்ளப்பட்டிருக்கும் அந்நியஜாதிவிவாஹமுதலாகியகாரியங்களில் எவன் என்னசெய்யவேண்டுமானாலும் செய்யலாமென்பதற்கும் வேண்டிய ஆதாரங்கள்காட்டிச் சட்டம்செய்துகொள்ள இடமுண்டாய்விடுமென்பதையும் யோசிக்கவேண்டும். பிரமாணசாஸ்திரங்கள் ஒரேவிஷயத்திற் பலவிதமானஅபிப்பிராயமுள்ளனவாகக் காணப்பட்டாலும் உண்மையில் அப்படியில்லையென்பதைப் பின்வருமுதாரணத்தாலும் பார்க்கலாம்.

ஏற்பட்டிருக்க, இந்த ருதுமதிவிவாஹவிஷயமாய் ஹிந்துசாஸ்திரவிதிகளை அலக்ஷியம்செய்து சட்டம்செய்வதாக அபக்யாதி ஏன் ஏற்படவேண்டும்.

தவிரவும் ஷெடிமசோதாவானது, ருதுமதிவிவாஹம்செய்கிற பெண்ணுக்கு வயது அளவு ஏற்படுத்தாமல் மேல்நாட்டுஸ்திரீகளைப்போல எந்தவயதிலும்செய்துகொள்ளலாம், அல்லது கல்யாணம் இல்லாமலும் இருந்துவிடலாம் என்ற மனம்போனபடி இருக்கும்படியான ஒருநடபடிக்கைக்கு இடம்கொடுக்கிறது. ஷெடி வழக்கங்களை அநுசரித்துவருகிற தீங்குகளைப்பற்றி நான் இங்கே எழுதி ஒருவரும்தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. அப்படிப்பட்டதீங்குகள் நமதுதேசத்துக்குவருவதைவிடப் பால்யவிவாஹம் முன்போல இருந்துவருவதே சிலாக்கியம் என்று சொல்லலாம். ருதுவானபின்பு இத்தனைவருஷத்துக்குள், பெண்ணுக்குக் கல்யாணம்செய்துதீரவேண்டுமென்னும் நிபந்தனம் மிகவும்முக்கியமானவிஷயம்.

---

தெய்வப்புலமைத் திருவள்ளுவர்செய்த திருக்குறளில்,

> " துஞ்சினார்செத்தாரின்வேறல்லரெஞ்ஞான்றும்
> நஞ்சுண்பார்கள்ளுண்பவர்" (திருக்குறள்—௯௨௬)

என்பதனாற் கள்ளுண்ணல் தீதென்று இகழப்பட்டிருக்கிறது. அந்நூலுள்ளேயே,

> " உள்ளினுந்தீராப்பெருமகிழ்செய்தலாற்
> கள்ளினுங்காமமினிது" (திருக்குறள்—௧௨௦௧)

என்பதனாற் கள்ளுண்ணல் நன்றென்று புகழப்பட்டிருக்கிறது. இங்குக் கேவலவ்யுத்பன்னர்க்குக் கள்ளுண்ணல்விஷயத்தில் திருக்குறள் ஒரேவிதமாக அபிப்பிராயப்படவில்லையென்றுதோன்றுமானாலும் அத்தோற்றம் பொய்த்தோற்றமேயன்றி வாஸ்தவத்திலில்லையென்பதை நூல்வல்லாரெல்லோராலுமறியலாம். ஆகையால், ஹிந்துசாஸ்திரங்களிற் பின்னபிப்பிராயங்களிருப்பனவாகச்சொல்வது யுக்தமாகத்தோன்றவில்லை.

---

(5) நம்முடையசாஸ்திரங்களில், பொதுவாகப் பெண் ருதுவாகி 3 வருஷம்வரை தகப்பன் கல்யாணம்செய்துகொடுக்கலாமென்றும், அப்படியும்செய்யத்தவறினால், பெண் தானே தக்ககணவனைத் தேடிக்கொள்ளலாமென்றும், ஏற்பட்டிருக்கின்றன. அப்படியே இந்தமசோதாவிற் சங்கதிகள் சேர்க்கப்படவேண்டும். இது ஸ்மிருதிகளின் பொதுவான தாத்பரியமாயிருப்பதாற் சாஸ்திரங்களின்சம்மதமாயுமிருக்கிறது.

தேகசாஸ்திரமறிந்த புத்திமான்கள் தேகம் வளர்ச்சியையும் பக்குவபூர்த்தியையும் அடைந்தபின் மணம்செய்வது சிலாக்கியமென்றுவிவகரிக்கிறார்கள். அந்தக்காரணத்தை நான் கொஞ்சமேனும் ஒப்பவில்லை. தற்காலத்துப்பெண்களின் முந்தினபரம்பரைகளில் இருந்தபெண்களுக்கு ருதுவாகி 2, 3 வருஷங்களுக்குள் ருதுசாந்திசெய்யப்பட்டுவந்திருப்பதனால் அவர்களுடைய தேகவலிமைக்கும், தேகவிருத்திக்கும் ஒருஇடைஞ்சலும் ஏற்பட்டதாகச்சொல்லமுடியாது. பிஞ்சிற்பழுத்ததுபோல் இளம்வயதில் ருதுவாகாமலிருக்கும்படியாக முன்போலுள்ள அப்பியாசங்களும் தேகப்பயிற்சிகளுமே ஏற்படவேண்டும்.

தேகமானது அதனுடையஇயற்கைக்குத்தக்கவாறு பக்குவத்தை அடைந்தபிறகு சுபாவத்துக்குவிரோதமாய் அந்தந்தச்சமயங்களிற் செய்யவேண்டியகாரியத்தைச் செய்யாதுதாமசிப்பதினால், தேகத்திற்கும் மனதிற்கும் கெடுதல்களுண்டாகுமேயல்லத் நன்மையுண்டாகக் காரணமில்லை.

அது எப்படியிருந்தாலும் 3 வருஷம் என்கிற ஒரு வரையறையானது சாஸ்திரசம்மதமாக இருப்பதால் அத் அநுஷ்டிக்கத்தக்கதென்று எனக்குத்தெரிந்தமட்டில் தோன்றுகிறது.

ருதுமதிவிவாஹம் இப்பொழுது செய்யவேண்டிய தவசியமா; சாஸ்திரங்களுடையசம்மத மெப்படியிருக்கிறது; நீடித்தவழக்கத்துக்கு விரோதமாயிருக்கிறதே ; என்னும்விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாக அடியிற்கண்டபடி ஆராய்ச்சிசெய்ய உத்தேசித்திருக்கிறேன்.

---

(5) சாஸ்திரங்கள்சொல்லுவதாக எழுதும் வாக்கியங்களுக்குக் கீழ்க்குறிப்புக்கொடுத்துச் சாஸ்திரங்களின்பெயர், இடம், சுலோகம் அல்லது சூத்திரங்களின்எண் இவற்றைக்காட்டி ஷை பிரமாணங்களை

## I. ஹிந்துமதமுக்கிய அம்ஸங்கள்.

ஹிந்துமதத்திற்கு ஆதாரங்களாயும் முக்கியஅம்சங்களாயும் இருக்கப்பட்டவிஷயங்கள் சில இருக்கின்றன. அவைகள், வேதத்திலுள்ள வாக்கியங்களைப் பிரமாணமாகக்கொண்டு அந்தப்படி அநுஷ்டித்தல், ஜாதிவர்ணாஸ்ரமதர்மம், த்விஜர்களுக்கு உபநயனசம்ஸ்காரம், ஸ்திரீக்குக் கல்யாணம்செய்யவேண்டியது அவசியமென்பது, ஒருபுருஷனை மணந்தவள் அவனிறந்தபிறகு வேறுபுருஷனை மணம்புரியக்கூடாதென்பது, பிதிரர்களுக்குச்செய்யவேண்டிய ஸ்ரார்த்தமுதலியகடமைகள், தேவர்களுடையதிருப்திக்கும் உலகத்தினுடையக்ஷேமத்துக்கும் செய்யக்கூடிய யாகங்கள் உபாசனை ஆகிய இவைபோன்றுள்ளவைகளே.

சகலஆசைகளையும்துறத்தல், ஜீவகாருண்யம் முதலிய சன்மார்க்க தர்மங்களை எவ்வளவோமேன்மையாக எடுத்து உபதேசித்தாலும் வேதப்பிரமாணங்களை அங்கீகரிக்கஇசையாத பௌத்தமதம் இந்தியாவில் நிலைபெறமுடியவில்லை. ஜைனமதமும் க்ஷீணதெசையை அடைந்தது. வேதத்தை ஒப்புக்கொண்டாலும் ஜாதிபேதத்தைவிலக்குவதற்காக ஏற்பட்டுள்ள "பிர்ம்மசமாஜம்" "ஆர்யசமாஜம்" ஆகிய இவைகளும் ஹிந்துமதத்துக்குப்புறம்பாகமதிக்கப்பட்டனவேயொழிய அவை ஹிந்துமதத்தின்கிளைகளாகமதிக்கப்படவில்லை.

கல்யாணமேசெய்துகொள்ளாதபெண்களும், விதவையாகி மறுபுருஷனைக்கல்யாணம்செய்துகொள்ளும்பெண்களும் ஜாதிப்பிரஷ்டைகளாகவாவது பாவத்துக்குட்பட்டவர்களாகவாவது மதிக்கப்படுகிறார்கள்.

விதவாவிவாஹம் அங்கீகரிக்கத்தக்கதென்று சுமார் 60 வருஷங்களுக்குமுன்னமே சட்டம் ஏற்பட்டிருந்தும் ஹிந்துக்களுக்குள் விதவாவிவாஹம் ஆதியில் உத்தேசித்தபடி விருத்தியடையவில்லை. ஆங்காங்குச் சிலஇடங்களில்மட்டும் மிகுந்தசிரமத்தின்பேரிற் சில விதவாவிவாஹங்கள் நடந்தேறிவந்திருக்கின்றன.

---

வடமொழியிலிருந்தப்படியே எழுதியிருந்தால் ஆராய்ச்சிசெய்து தெளிபவர்களுக்கு மிகவும் ஸாதகமாயிருக்கும். அப்படிக்காட்டாதிருப்பினும், சொல்லப்பட்ட வாக்கியப்பொருள்கள் சாஸ்திரங்களில் வாஸ்தவமாயிருக்கலாமென்ற நம்பிக்கைபற்றியே பத்திராதிபருக்குத்தோன்றும் அபிப்பிராயம் இங்கு எழுதப்பட்டுவருகிறது.

(6) மனதினால் ஒருபுருஷனைக் கணவனாகமதித்தாலும் கல்யாணம் செய்துகொண்டபுருஷனுக்குச்சமத்வமாகமதித்து அவனைத் தெய்வமாகப்பாராட்டிவந்துள்ள பதிவிரதாசிரோமணிகள் இருந்துவிளங்கிய இந்தத்தேசத்தில் ஸ்திரீகள் பொதுவாக மறுபுருஷனைத்தழுவவிரும்புவார்களோ.

ஆதிகாலத்தில் எண்ணிறந்தஅரசர்கள் பரசுராமனால்மாண்டார்கள். ஷெ அரசர்களுடையபத்தினிகளெல்லாம் வைதவ்யத்தையடைந்து அக்கினியில்விழப்போகும்சமயத்திற் காசிபமுனிவருடைய வார்த்தைக்குக்கட்டுப்பட்டு, ராஜவம்சம் மறுபடியும் உலகத்தில்தழைத்தோங்கும்பொருட்டு, சுத்தமனதையுடையவர்களான ரிஷிகளின்மூலம் புத்திரர்களைப்பெற்று ராஜவம்சங்களை மறுபடியும்விருத்திசெய்தார்களென்று ஹிதிகாசபுராணங்களிற் சொல்லப்படுகிறது. அதேபிரகாரம் புருஷனிருந்து புத்திரனடையப்பிராப்தமில்லாதசுமங்கலிகளும் வைதவ்யத்தையடைந்து இஹபரசாதகத்தின்பொருட்டுப் புத்திரனைஅபேக்ஷித்த பதிவிரதைகளும், காமத்தைத்துறந்தவர்களான மகான்களுடன் கலந்து புத்திரர்களைஅடைந்ததாகவும் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்டமகான்கள் இக்கலியுகத்திற் குறைந்துபோனதினிமித்தம் வம்சவிருத்தியின்பொருட்டு ஒருபுத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதும் சாஸ்திரசம்மதமானவழக்கமாகவே ஏற்பட்டுவருகின்றது.

ஸ்திரீபுருஷாள்கல்யாணமென்பது கேவலம் இந்திரியசுகத்திற்கென்றுமதிக்கப்படாமல் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்குபுருஷார்த்தங்களுக்கும் சாதகமாகமதிக்கப்பட்டுவந்திருக்கிறது. ஆதலால் விதவைகளாய்ப்போனஸ்திரீகள் எப்பொழுதும் மறுபுருஷனை விவாஹம்செய்துகொள்ளலாமென்றாவது செய்துகொண்டார்களென்றாவது ஸ்மிருதியாவது அநுபவமாவது இருப்பதாக நான் பெரியவர்களைக் கேட்டுத்தெரிந்துகொண்டமட்டிற் கிடையாது. ஆதரவுகளிருப்பதாக வியவகாரத்துக்குப்பேசலாமேயொழிய வேறில்லை.

---

(6) இங்கு விதவாவிவாஹமானது நம்தேசத்துப்பெண்களுக்குத் திருப்தியில்லாமையால் வளர்ந்தேறவில்லையென்றுமட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக்காட்டிலும் பிள்ளைகளுக்கும் திருப்தியில்லாத முக்கியமானவிஷயம் ஒன்று அவசியம் கவனிக்கத்தக்கதாயிருக்கிறது.

நித்தியகர்மங்களைச் சரியாய்ச்செய்யாதவன்கூடத் தன்னுடைய பந்துஜனங்களுக்கும் ஜாதியார்களுக்கும்பயந்து எப்படியாவது தன் பெற்றோர்களுக்கு எள்ளும்தண்ணீரும் இறைக்கிறான். ஆதலால் ஷடி தர்மங்களெல்லாம் நடத்தப்படவேண்டியவைகளேயென்று சுருதி, ஸ்மிருதி, அநுபவங்களைப்பற்றித் தொடர்ச்சியாய் அநுஷ்டிக்கப்பட்டுவந்திருக்கின்றன.

மேற்கண்டவிஷயங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு அவைகளுக்கு உள்ளடங்கியவிஷயமாக அதாவது (Non-essentials) முக்கியமில்லாத விதிகள் அநுஷ்டானங்கள்விஷயமாக இந்தப்பரதகண்டத்திற் பல இடங்களிலும் பலகாலங்களிலும் வித்தியாசங்கள் ஏற்பட்டுவந்திருக்கின்றன.

பரப்பிர்ம்மஸ்வரூபவிஷயமாக ஆசார்யர்களுக்குள், பேதமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டு அதன்மூலமாய் வெவ்வேறுவகுப்பினராயுள்ள ஸ்மார்த்தர்களும் வைஷ்ணவர்களும், மாத்வர்களும் ஒரேஹிந்து மதத்தினர்களன்றோ?

ஒருவருக்கொருவர் கல்யாணசம்பந்தமில்லாமல் ஒருநாட்டுக்கும் மற்றநாட்டுக்கும் வெகுவானபோக்குவரத்துச்சம்பந்தம் முன்காலத்தில் இல்லாததினிமித்தம் வடமர்களென்றும், பிரஹசரணர்களென்றும், அஷ்டசகஸ்திரர்களென்றும், வாத்திமர்களென்றும், கேசியர்களென்றும், ஆந்திரர்களென்றும், மகாராஷ்டிரர்களென்றும் பலபிரிவினராகிய ஸ்மார்த்தர்களெல்லோரும் ஒரே ஹிந்துமதத்தினர்களன்றோ.

---

அது என்னவென்றால், விதவாவிவாஹத்துக்குடம்பட்ட பெண்களின் மனதில், புருஷனிறந்தால் மறுபுருஷனையடையலாமென்ற தைரியமுண்டாவதற்கிடமிருப்பதால் பெண்கள் பெரும்பாலும் இடிப்பார்கையிலகப்பட்டுக்கொண்டு இன்பநுகர்ச்சிக்கிடைஞ்சலான குடும்பச்சச்சரவுகளால்வருந்தும் பிராஹ்மணஜாதியில் இடையிடையே வறுமைமுதலிய பலவழியாலும் புருஷனிடத்துண்டாகக்கூடிய வெறுப்புக்காரணமாகவும், புருஷனிறந்தால் மறுபுருஷனையடைய மார்க்கமிருப்பதுகாரணமாகவும், அவர்கையில் தம்பிராணனை அடைக்கலமாகவைக்கக்கடவரான மணவாளர்களின் உயிர்வாழ்க்கை யென்னவாய்முடியுமென்பதாம்.

(7) இன்னும் ஒருவருக்கொருவர் பந்திபோஜனமில்லாமல், சம்பந்தம்செய்தும், செய்யாமலும் மதங்களின் ஸ்தூலசம்பந்தமான அற்ப விஷயங்களைப்பற்றி அடிக்கடி சச்சரவுசெய்துகொண்டிருக்கும் தென்கலைவைஷ்ணவர்களும், வடகலைவைஷ்ணவர்களும் ஹிந்துமதத்தினர்களன்றோ? மாத்துவர்களும் அப்படியே; ஏனென்றால் அவர்கள் எல்லோரும் மேலேசொல்லப்பட்ட முக்கியமான அம்சங்களில் ஒற்றுமையான நம்பிக்கையும், விஸ்வாசமும், அநுஷ்டானமு முள்ளவர்களாய் இருந்து வருவதுதான்காரணம்.

நமதுதேசத்தில் நம்முடைய ஹிந்துமதசாதியார்கள் அபிவிர்த்தியடையவேண்டுமென்றுவிரும்பி முயற்சித்துவருகின்ற ஆசாரசீர்திருத்தக்காரர் (Social Reformer) மேலேசொன்ன முக்கியமான அம்சங்களிற் பிரவேசித்துச் சீர்திருத்தம்செய்ய எத்தனம்செய்தால் அது வீண்பிரயத்தனமாகவேமுடியும். ஆனாற் காலவித்தியாசத்தினால் ஹிந்துமதவிஸ்வாசகர்கள் வேதமென்ன, சாஸ்திரமென்ன, யாகமென்ன, எக்ஞமென்ன, எக்ஞோபவீதமென்ன, ஜாதிவித்தியாசமென்ன, சிவன், விஷ்ணு முதலியதெய்வங்களின்பக்தி என்ன என்று ஹிந்துமதமுக்கிய அம்சங்களை அடியோடு தள்ளுவதாயிருந்தால் அப்பொழுது ஹிந்துமதமென்றகட்டடத்தின் அஸ்திபாரமே உலைவடைந்து அவரவரிஷ்டம்போல் மதங்களும் அபிப்பிராயங்களும் அநுசரித்துக்கொள்ளப்படும். ஆனால் ஷை அபிப்பிராயங்கள் அதாவது ஜாதிபேதத்தினால்தான்

---

(7) வடகலை தென்கலை வைஷ்ணவர்கள் மதசம்பந்தமாகச் சச்சரவுசெய்துகொண்டிருப்பதாகக் கண்டிருக்கிறது. விவாஹஸம்பந்தமுள்ளவர்களாயும் ஒரேசித்தாந்தமுடையவர்களாயுமுள்ள வடகலைதென்கலை வைஷ்ணவர்களுக்குள்ளுண்டாகும் சச்சரவுகள் மதசம்பந்தமான ஸ்வல்பவித்தியாசம்பற்றியதாயிருக்குமானால், விவாஹசம்பந்தமில்லாதவராயும் வேறுவேறுசித்தாந்தமுடையராயுமுள்ள ஸ்மார்த்த மாத்துவர்களுக்கு எவ்வளவு மிகுதியானசச்சரவிருக்கவேண்டும்! ஆயிரவருஷகாலங்களிற்பார்த்தாலும் ஒருசச்சரவாவது உண்டாயிருந்ததாகக் காணப்படவில்லையே! அதிருக்கட்டும்; வைஷ்ணவர்களுக்குத்தான் ஸ்மார்த்தர்களோடாவது மாத்துவர்களோடாவது சச்சரவுநேர்வதுண்டா? அப்படியுமில்லாதிருக்கச்செய்தே வடகலைதென்கலைவைஷ்ணவர்களுக்குமட்டுமுண்டாகும் சச்சரவுகளை மதசம்பந்தமாயுண்டாவன

நமதுதேசம் க்ஷேமம் அடையவில்லை, விதவைகளுக்குக்கல்யாணம் செய்தால்தான் ஸ்திரீசுதந்திரமென்கிறபாக்கியம் பலிதமாகும் என்பது முதலிய சீர்திருத்தங்களை முயற்சித்துவரும் ஆசாரத்திருத்தக்காரர் (Sodial Reformer) ஏதோ அதிர்ஷ்டவிசேஷத்தால் இன்னும் இந்தத் தேசத்திற் போதுமானபடி விருத்தியடையவில்லை. அதுபற்றியே இந்துமதம் இந்தமட்டில் ஜீவித்திருக்கிறது.

## II. ஹிந்துமதத்தின் முக்கியமில்லாதவிதிகள்.

ஹிந்துமதத்தின் முக்கிய அம்சங்களடங்கிய கட்டடத்திற்கு உலைவில்லாமல் இரண்டாம்பக்ஷமாவதும், காலதேசவர்த்தமானத்துக்குத் தக்கபடி மாறக்கூடியதுமான சில சீர்திருத்தங்களை நம்முடையதேச க்ஷேமத்தின்பொருட்டுத் தேசாபிமானிகளும், மதாபிமானிகளும் முயற்சிசெய்ய ஏற்பட்டால் அதனால் நம்முடையமதத்துக்கே மிகுந்த அபாயம்வந்துவிட்டதாகப் பயந்து, பெரியவர்கள் ஏற்படுத்தினவழக்கத்தை ஏன் மாற்றவேண்டும்? அதற்குச்சாஸ்திரம் இடம்கொடுக்கவில்லை, அப்படிச் சாஸ்திரம் இடம்கொடுத்தாலும் அது கலியுகத்திற்கு ஏற்பட்டதில்லை யென்று இந்துக்களிற் பெரும்பான்மையோர் ஒரேபிடிவாதமாய் ஆக்ஷேபணைசெய்துவருகிறார்கள். அது மிகவும் பரிதபிக்கத் தக்கது.

வேதங்களினாலும், ஸ்மிருதிகர்த்தாக்களினாலும் எப்பொழுதும் ஒரேவிதமான அபிப்பிராயத்துடன் மாறுதலில்லாமல் உபதேசிக்கப் பட்டுவந்தவிதிகளிற் சில அநுஷ்டானங்களிற் சேராது சமயம்போலவும் அந்தந்தருஷிகளினுடைய அபிப்பிராயம்போலவும் மாறுதல்களையடைந்துவந்திருக்கின்ற ஹிந்துமதகட்டடத்திற்கு அநுகூலமாயுள்ள கௌணசாரங்களில் (Non-essentials) ப்ரௌடாவிவாஹமென்பதும் ஒன்று.

---

வென்றுசொல்லுவது சிறிதும்பொருந்தாது என்பதை அறிவுடையோர் நன்றாயறியவேண்டும். பின்னை எதனாலுண்டாவதென்றால் மற்றும் உலகத்தில் ஒருவர்க்கொருவருண்டாகும் குடும்பச்சச்சரவுகள் எப்படியோ அப்படியே பாத்தியாபாத்தியவியவகாரம் காரணமாகவே உண்டாவதாயிருக்கிறது. ஏகதேசங்களில் மதசம்பந்தமாகவும் ஜாதிசம்பந்தமாகவும் சச்சரவுண்டாவதாயிருந்தபோதிலும், அது, அவிவேகிகளின்கூட்டத்திலுண்டாவதல்லது விவேகிகளின்கூட்டத்தில் உண்டாகாமையால், அதற்கு அவிவேகமேகாரணமென்பதல்லது மதபேதமும் ஜாதிபேதமும் காரணமென்றுகொள்வது பொருந்தாததாயிருக்கிறது.

## III. ருதுமதீவிவாஹம், சாஸ்திரதாத்பரியம்.

மேற்கண்ட முக்கியமானவிஷயங்களில் இடங்களினாலும் காலங்களினாலும் மாறுபடாத ஒரேவித அபிப்பிராயங்கள் ருஷிகளாற் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு ருதுவானபெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளலாமென்ற விஷயத்தைப்பற்றி அவர்கள் அபிப்பிராயங்கள் வித்தியாசமாயிருக்கின்றன. இதனாலேயே ப்ரௌடாவிவாஹமென்பது சரியில்லையென்று யோஜிக்காமல்தள்ளுவது நியாயமில்லை என்றும் ஆக்ஷேபசமாதானங்களைக்கேட்டு ஆராய்ந்து ஒருமுடிவுக்குவரவேண்டியவிஷயமென்றும் தெரிகிறது.

(8) சில ஸ்மிருதிகளில் ருதுவானபின்பு விவாஹம்செய்விக்கும் தகப்பனுக்கும், அவ்வதூவரர்களுக்கும் ஏதோ பாபம்சம்பவிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, ஒரு ஸ்மிருதியிலாவது ருதுமதீவிவாஹம், விவாஹமே அல்லவென்றாவது, அவ்விவாஹம்செய்து

---

உண்மை இப்படியிருக்க, மதபேதங்களும் ஜாதிபேதங்களும் சச்சரவுக்குக்காரணமென்று அவற்றை அறிவுடையோரும் தூஷணைபுரிவதானது, நம்மவர்க் கின்னும்சிறிதிருக்கும் மதாபிமானத்தையும், ஜாத்யபிமானத்தையும் அடியோடுகெடுக்கவேண்டிச் சுயேச்சையென்னும் காமசாரத்தைநிலைநாட்டுங்கருத்தினராலெழுதப்பட்டபுத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிக்கும்வாஸனையாற்றோன்றியதென்று பிராமாணிகரா லநாதரிக்கத்தக்கதாயிருக்கிறது.

---

(8) இங்கு, "ருதுமதீவிவாஹத்துக்கு ஏதோ பாபம்சொல்லப்பட்டிருப்பதல்லது ஒருஸ்மிருதியிலாவது அது விவாஹமாகமாட்டாதென்றாவது, செய்யப்பெற்றவர்கள் ஜாதிப்பிரஷ்டர்களாவரென்றாவது சொல்லப்படவில்லை" என்றவிஷயங்கள் நாம் உத்தேசிக்கும் ருதுமதீவிவாஹத்துக்கு எவ்வளவுதூரம் சாதகமாகின்றனவென்றுபார்ப்போம்.

ஸ்மிருதிகள், ருதுமதீவிவாஹம் பாபகிருத்தியமென்றுசொல்லியிருப்பதைத்தெரிந்துகொண்டேபிரவிர்த்திக்கும் நாம் அப்பாபத்துக்குப் பிராயச்சித்தமுண்டா இல்லையாவென்பதை அவசியம் அறியவேண்டியவர்களாயிருக்கிறோம். பிராயச்சித்தமில்லையென்று ஏற்பட்டுவிட்டால் பிராயச்சித்தமில்லாத புத்திகிருதபாபம் ஜாதிப்பிரம்சகாரணமாகுமா ஆகாதாவென்பதையும் பார்க்கவேண்டும். அது ஜாதிப்பிரம்சகாரணமாகும்பக்ஷத்தில் ஜாதிப்பிருஷ்டர்களாவார்களென்று சாஸ்திரம்சொல்லவேண்டியதில்லையே! ருதுமதீவிவாஹம் பாபகர்மமென்றுசொல்லப்பட்டிருக்கும்போது, புண்யகர்மமாகிய விவாஹமாகமாட்டாதென்பது தனியாய்ச்சொல்லவேண்டிய தவசியமா! ஆகையால் பாபமுண்டென்று தெரிந்துசெய்யப்பட்ட ருதுமதீவிவாஹத்துக்குப் பிராயச்சித்தமுண்டா இல்லையாவென்பதைப் பரியாலோசித்துப் பிராயச்சித்தமுண்டென்று

கொண்ட வதூவரர்கள் ஜாதிப்பிரஷ்டர்களாவரென்றுவது சொல்லப் படவில்லை.

(9) ஆனால் நாரதர் பெண் பெரியவளானபிறகு அவளுக்குச்

---

தெரிந்துகொண்டாலன்றி, ருதுமதீவிவாஹம் விவாஹமில்லையென்று வது, செய்தவர் ஜாதிப்பிருஷ்டர்களென்றுவது ஸ்மிருதிகள்சொல்லா திருப்பதே அநுகூலமென்றுகொள்ளுவதற்கிடமில்லையென்று தோன்று கிறது.

---

(9) "பெண் பெரியவளானபிறகு சீக்கிரம் விவாஹம்நடக்கவேண் டும்" என்ற நாரதவாக்கியம் ருதுமதீவிவாஹநிஷேதவாக்கியங்களைவிரோ திப்பதுபோலத் தோன்றுகிறது. இது எந்தமட்டில்விரோதிக்கிறதென் பதைப் பரியாலோசிப்போம். இந்தவாக்கியத்துக்குப் பெண் பெரியவ ளானபிறகு விவாஹம்செய்யவேண்டும் என்பதில் தாத்பரியமா? அல்லது பெண் பெரியவளாய்விட்டால் விவாஹம் தாமசிக்கலாகாது என்பதிற் றாற்பரியமா? என்பதைப் பரியாலோசிக்கவேண்டும். சீக்கிரம் என்று விரைவுபடுத்துவதால், தாமசிக்கக்கூடாதென்பதில் முக்கியநோக்கமென் றும், இவ்வளவுகாலத்துக்குள் என்று சொல்லாமையால் நியாயமாய் எவ்வளவுகாலத்துக்குள் செய்யமுடியுமோ அவ்வளவுக்குள் செய்துவிட வேண்டுமென்றும், கீழெல்லைசொல்லாமையால் ஸ்நாநாநந்தரமே செய் யக்கூடுமானாலும் செய்துவிடவேண்டுமென்றும், அப்படிச்செய்யாமல் தாமசித்துச்செய்தால் அந்தவிவாஹம் விதிப்படிசெய்ததாகமாட்டாதென் றும் தாத்பரியங்கொள்ளக்கிடக்கிறது.

அன்றியும், ருதுமதியானால், சீக்கிரம்விவாஹம்செய்யவேண்டுமென்று விரைவுபடுத்துவதால் ருதுமதியாகுமுன்னே பிதா சாவகாசமாக விவா ஹம்செய்விக்கக் கடமைப்பட்டவனென்பதும், அப்படிச்செய்யாதிருப்பது விவாஹகாலநிர்ணயத்தைக் கடப்பதாயிருக்கிறதென்பதுமான அபிப் பிராயத்துடன்கூடியிருப்பதால், நாரதருக்கும் கந்யாவிவாஹமே அங்கீ காரமென்பதும், ருதுவானபின் தாமசிப்பதில் இஷ்டமில்லையாதலால், தாமஸித்துச்செய்யும் விஷயத்தில் ருதுமதீவிவாஹ நிஷேதவாக்கியங்க ளில் தமக்கு ஆக்ஷேபமில்லையென்பதும் வெளியாகின்றன.

இதனால் விவாஹங்கள், கந்யாவிவாஹம், ருதுமதீசீக்கிரவிவாஹம், ருதுமதீவிளம்பவிவாஹம் என மூன்றுவகையாகப்பிரிக்கப்படுகின்றன. அவற்றுள், கந்யாவிவாஹத்தால் பிதாவுக்கு ஊர்த்துவலோகப்பிராப் திக்குஹேதுவாகிய புண்ணியம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அது புண்ணியகர்மமாகிறது. காலவிளம்ப ருதுமதீவிவாஹத்தால் பிதா வுக்கும் வதூவரர்களுக்கும் பாபம் சொல்லப்பட்டிருப்பதால் அது பாப கர்மமாகிறது. இவ்விரண்டுவிஷயத்திலும் நாரதவாக்கியத்துக்கும் ஒரே அபிப்பிராயமென்பதை ஆக்ஷேபிக்க இடமில்லை. ஆனால் ருதுமதீசீக்கிர

விவாஹத்தில்மட்டும் கந்யாவிவாஹவிதிவாக்கியங்களையும், ருதுமதி விவாஹநிஷேதவாக்கியங்களையும் விரோதிப்பதுபோல் தோன்றுகிறது. அதுவும் வாஸ்தவமா என்பதைப் பரியாலோசிப்போம்.

சாஸ்திரவாக்கியங்களெல்லாம் விதிநிஷேதங்களையே விஷயமாகக் கொண்டுள்ளன. அவை விதித்தவிஷயத்தையே நிஷேதித்தாலும், நிஷேதித்தவிஷயத்தையே விதித்தாலும் ஒரேவிதமான அபிப்பிராயமில்லையென்றுசொல்லலாம். இங்கே விதித்ததை நிஷேதிக்கிறதா, நிஷேதித்ததை விதிக்கிறதாவென்று பார்க்கவேண்டும். காலக்கிரமத்தில் முன்னாலே கந்யாவிவாஹம் விதிக்கப்பட்டிருக்கிறது. பின்னாலே ருதுமதீ விவாஹம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுக்கும்நடுவே அசுர சந்திபோல ருதுமதீசீக்கிரவிவாஹமொன்று பிராப்தமாகவே ருதுமதியானகாரணத்தைக்கொண்டு, ருதுமதீவிவாஹ நிந்தாவாக்யம் நிஷேதிக்கத்தொடங்கலாம். ஆனால், கந்யாவிவாஹம்செய்விக்க ப்ரதீக்ஷித்திருக்கும் பிதா தெய்வாதீனமாய்ப்ராப்தமானருதுவுக்குக் காரணமாகாமையால் அவனைப் பாபத்துக்குள்ளாக்குவது நியாயமில்லாதிருப்பதாலும், மிருததிதியில் பண்ணக்கடவதானசிராத்தத்தை ஆசௌசாதிகளாலுபஹதியுண்டாகவே அது கழிந்தவுடனே தாமஸியாது வேறுதிதியிற் செய்தாலும் தத்தினசிராத்தமாகவே பாவிக்கப்படுவதுபோல ருதுமதீ சீக்கிரவிவாஹமும் கந்யாவிவாஹம்போலவே பாவிக்கத்தகுமென்று தோன்றுவதாலும் சீக்கிரம்செய்துகொள்ளும்படி எச்சரிக்கத்தக்கதாகவேயிருக்கிறது.

ஆகையால் இங்குக்காட்டப்பட்ட நாரதவாக்கியமானது, ருதுமதீ விவாஹநிஷேதவாக்கியத்தையாவது கந்யாவிவாஹவிதிவாக்கியத்தையாவது விரோதியாமலே ஆதரித்துக்கொண்டு அவ்விதிநிஷேதங்களிரண்டும்கூடிச்செய்த ஒரு எச்சரிக்கைநோட்டீஸ்போலிருப்பதால் மூன்றும் ஒரேவித அபிப்பிராயமுடையவாயிருக்கின்றன. ஆகையால் இங்குக் காட்டப்பட்ட நாரதவாக்கியமானது நாம் உத்தேசிக்கும் ருதுமதீவிவாஹத்துக்கு ஆதரவில்லாமற்போவதுமன்றி விரோதமுள்ளதாகவும் இருக்கிறதென்று தோன்றுகிறது.

(10) கிருஹ்யசூத்திரத்திற் பெண் பெரியவளான மூன்றுவருஷத்துக்குள் அவளுக்கு விவாஹம்செய்துவைக்காவிட்டால் அவளுடைய

---

(10) "ருதுமதியானவளுக்கு மூன்றுவருஷத்துக்குள் விவாஹம் செய்துவைக்காதபிதா பாபமுள்ளவனாகிறான்" என்ற கிருஹ்யசூத்திர வாக்கியத்தைப்பார்க்கும்பொழுது ருதுமதீவிவாஹவிஷயத்தில் தாராள சிந்தையோடு அநுகூலம்செய்வதாயிருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆயினும் அதன் தாத்பரியமும் எப்படியிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இது ருதுமதீவிவாஹவிதிவாக்கியமா நிஷேதவாக்கியமாஎன்பதை ஆராயுமிடத்து "மூன்றுவருஷத்துக்குள் விவாஹம்செய்துவைக்க வேண்டும்" என்பது சொற்பொருளாயில்லாமையால் விதிவாக்கியமாகிறதில்லை. குறிப்பிட்ட மூன்றுவருஷகாலத்தையும் அதிக்கிரமித்தவன் பாபத்தையடைகிறான் என்று நிஷித்தபலமே சொற்பொருளாயிருப்பதால் நிஷேத்வாக்கியமாகிறது. இது ருதுமதீவிவாஹத்தை எப்படிநிஷேதிக்குமென்றால் மூன்றுவருஷத்தை அதிக்கிரமித்துச்செய்வதும், மூன்றுவருஷத்துக்குள்செய்யாமையும் ஒன்றேயாகையால் மூன்றுவருஷத்தைஅதிக்கிரமித்து ருதுமதிக்கு விவாஹம்செய்யும்பிதா பாபத்தையடைகிறான் என்பது தாத்பர்யமாயிருப்பதால் இது ருதுமதீவிவாஹ நிஷேதவாக்கியமாகவேயிருக்கிறது. இது கந்யாவிவாஹவிதிவாக்கியத்துக்குவிரோதமில்லாமலும் அதை ஆதரித்துமிருக்கிறது.

எப்படியென்றால், கந்யாவிவாஹம் பண்ணக்கடவனெனபிதா அந்தப் புண்யத்தால் ஊர்த்வலோகப்ராப்தியடையவனாயிருக்கச்செய்தே அதனையிழக்காது கந்யாவிவாஹம்செய்யச் சித்தனாகவேயிருப்பன். அப்படிச்செய்வதற்குள் அவசமாய் ருதுமதியாய்விட்டால் அது அவன் செய்த தவறாகமாட்டாது. அவசமாய்த் தவறியகாரியத்தைக் கால தாமசமில்லாமல் அடுத்துச்செய்யவேண்டுவது அவசியமாகையால் ருதுமதியானவளுக்குச் சீக்கிரம் விவாஹம்செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். ஆனால் ஒரு விவாஹம்நடப்பதற்கு அநுரூபமானவரனைத் தேடவும், திரவ்யசம்பாதனம்செய்யவும், முஹூர்த்தகாலங்கள்வாய்க்கவும், எதிர்பாராதுநேரக்கூடிய இடையூறுகள்நீங்கவும் போதுமான சாவகாசமிருக்கவேண்டுமாகையால் அவற்றிற்கெல்லாம் பரமாவதியாக மூன்றுவருஷம் போதுமானசாவகாசம்வைத்துக்கொள்ளட்டும் என்று தாராளமான காலாவதியும்கொடுக்க அதையும் கடப்பானாகில் அவன்

தகப்பன் பாவமுள்ளவனாகிறானென்று சொல்லப்படுகின்றது.

(11) பௌத்யாயனர், மனு, கௌதமர், வசிஷ்டர், யாக்ஞவல்கியர், ஆபஸ்தம்பர் இவர்களுடைய ஸ்மிருதிகளிலும் கிருஹ்யசூத்திரங்களிலும் விவாஹம்செய்தநாலாவதுநாள் சாந்திமுகூர்த்தம் (கெர்ப்பாதானம்) செய்யவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி

---

புத்திபூர்வமாகவே சாஸ்திரத்தைக்கடந்தவனாகமதிக்கப்பட்டுப் பாபத்துக்குள்ளாவதால் பஹிரங்கபாபியாகிறான் என்று தாற்பரியம்பண்ணுவதற்குப்பொருந்துவதாயிருக்கிறதன்றி ருதுமதீவிவாஹத்தைச்சிலாகித்ததாகக்கொள்ள இடமில்லையாகையாலும், விளம்பிக்கலாகாதென்பதே முக்கியதாத்பரியமாகையாலும், சீக்கிரம்செய்யவேண்டுமென்ற நாரதவாக்யதாத்பரியமும் தாமசிக்கலாகாதென்ற பிரகிருதவாக்கியதாத்பரியமும் ஒன்றாகவேயிருக்கிறது. சீக்கிரமென்றதனால் கீழெல்லைமட்டுங் குறிக்கப்பட்ட நாரதவாக்கியத்தின்சேஷமாகவே,மூன்றுவருஷங்கடக்கலாகாதென்று மேலெல்லைசொல்லியபடியால் இரண்டும்ஒன்றாய்க் கந்யாவிவாஹத்திலேயே நோக்குள்ளனவாயிருக்கின்றன. ஆகையால் இந்த ருதுமதீசீக்கிரவிவாஹப்ரஸங்கமானது யதாயோக்கியமாக (ஏற்புழிக்கோடலால்) உபநயனம்போலப் பன்னிரண்டுவயதுக்குமேல் விவாஹகாலம்விதிக்கப்பட்ட பிராஹ்மணேதரகந்யாவிஷயங்களில் ஸ்வபாவசித்தமாகவே சம்பவித்துச் சரிதார்த்தமாயிருப்பதால் அவ்வயதுக்குள் விவாஹகாலம்விதிக்கப்பட்ட பிராஹ்மணகந்யாவிஷயத்திற் ப்ரவர்த்திப்பதிற் சாமர்த்தியமற்றதாயிருக்கிறதென்று சாஸ்திரதிருஷ்டியால் அறியத்தக்கதாயிருக்கிறது.

---

(11) பௌத்யாயனமுதலிய ஸ்மிருதிகளிலும், கிருஹ்யசூத்திரங்களிலும் விவாஹம்செய்தநாலாம்நாள், கெர்ப்பாதானம் செய்யவேண்டுமென்றுசொல்லியிருப்பதானது, விவாஹகந்நிகைக்குக் கெர்ப்பாதானயோக்கியமான ஆர்த்தவத்துவம் இருக்கவேண்டுமென்னும் ஊஹத்துக் கிடம்கொடுக்கிறது. இந்த ஊஹமானது கந்யாவிவாஹவிதிவாக்கியத்தைவிரோதிப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனாலும் வாஸ்தவத்தில் விரோதிப்பதில்லை. ஏனென்றால் சப்தப்பிரமாணமில்லாத இடங்களில் ஊகம் தலையெடுப்பதல்லது, சப்தப்பிரமாணமுள்ள இடங்களில் அதற்குப் பிரதிகூலமாக ஊகம் தலையெடுக்கமாட்டாதென்பது

யானல் ' ஷெ ஸ்மிருதிகர்த்தாக்களிற்சிலர் ருதுவாவதற்குமுன்விவாஹம்செய்யவேண்டுமென்ற அபிப்பிராயத்துக்கு இது விரோதமாயிருக்கிறது.

---

சாஸ்திரசம்மதமாயிருக்கிறது. இதனைச் "சொல்லில்வழியது உய்த்துணர்வு"எனச் சேனாவரையர் பலவிடங்களிற்காட்டுதலாலும் அறியலாம்.

அன்றியும், கெர்ப்பாதானமானது பீஜசுத்தியின்பொருட்டுச் செய்யப்படும் மாந்திரிகஸம்ஸ்காரவிசேஷமாகையால் அது சார்த்தகமாகவேயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லை. ஆயினும், யதாயோக்கியம் (ஏற்புழிக்கோடலால்) வர்ணாந்தரவிவாஹத்தில் சார்த்தகமாந்திரிகஸம்ஸ்காரமாய்ச் சரிதார்த்தமாகிறபடியால் பிராஹ்மணவிவாஹவிஷயத்திற் கேவலமாந்திரிகஸம்ஸ்காரமாயிருப்பதால் கந்நியாவிவாஹவிதிவாக்கியங்களைவிரோதிக்கவில்லையென்றுதோன்றுகிறது.

இந்தஸம்ஸ்காரம் ருதுமதியானபின்பேசெய்யத்தக்கதாயிருந்தபோதிலும் ருதுவானவுடன் காமாதுரசங்கமனம்நேர்ந்தாலும் பீஜசுத்தியுண்டாயிருக்கும்பொருட்டு விவாஹத்தில் ஆகர்ஷித்துச் சங்கிரஹமாகச்செய்யப்படுகிறது. அப்படிச்செய்யப்பட்டிருந்தபோதிலும் ஆகர்ஷித்துச்செய்யுங்கர்மங்களைப்(ஷோடசமாசிகாதிகளை) பின்னும் செய்தற்குரிய அவ்வக்காலங்களில் விஸ்தரித்துச்செய்வதுபோலவே ருதுசாந்தியிலும் விஸ்தரித்துச்செய்யப்படுகிறது. ஆகையால் விவாஹத்தில் விதிக்கும் கெர்ப்பாதானஸம்ஸ்காரமானது பிராஹ்மணவர்ணத்திலும் ருதுமதீவிவாஹம் சாஸ்திரசித்தமென்றாகிப்பதற்குஸாதகமாகுமென்று தோன்றவில்லை.

அன்றியும், சுபமுஹூர்த்தங்களைப் பிரதீக்ஷித்துச்செய்யுங் கிரியாவிசேஷங்களில் அபேக்ஷயபூர்த்திபிருக்கவேண்டுமென்னும்நியமமில்லையென்பதை, மழைபெய்யாதிருக்கச்செய்தே உழவுகொடாதநிலத்திலும் கர்ஷகர் நாளேர்வைப்பதாலும், உத்ஸவங்களில் விதானசாமக்கிரிவருமுன்னமே நாட்கால்நடுவதாலும், கிருஹநிர்மாணசாமக்கிரிகள்வருமுன்னமே வாஸ்துச்செய்வதாலும் அறியலாம்.

(12) அதுவுமல்லாமற் கல்யாணத்திற்சொல்லப்படுகிற ஒவ்வொரு மந்திரமும், உடனே கிரஹஸ்தாஸ்ரமதர்மத்தை நடத்தக்கூடிய புத்தியறிந்தபெண்ணுக்கும் அவள்புருஷனுக்கும் ஒப்பந்தப்பேச்சுகள் ஏற்படுவதுபோலிருக்கிறது. பாணிக்கிரஹணமானபிறகு பெண் தன்புருஷன்வீட்டுக்குப்போய் 3 நாள் இருவரும் பிர்ம்மசரியவிரதத்தையநுஷ்டித்து 4-வதுதினம் படுக்கையறையில்விடப்பட்டுச் சாந்திமுகூர்த்தம் அப்பொழுதேநடத்தப்படுவதாகவும் வெளியாகிறது.

நடந்தகல்யாணத்தைச் சட்டப்படிசெல்லாததாக 5 நிபந்தனைகள் விக்ஞாநேஸ்வரரால் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—பெண் மாப்பிள்ளைகளுக்குள் வித்தியாசமானஜாதி1, ஒரேப்ரவரம்2, ஒரேகோத்திரம்3, சபிண்டர்களாயிருத்தல்4, பெண்ணுக்கு ஏற்கனவே கல்யாணமாயிருத்தல்5, இவ்வைந்தில் ஏதாவது ஒன்றிருந்தாலும் கல்யாணத்திற்சம்பந்தப்பட்ட பெண் மாப்பிள்ளைகள் புருஷன்பெண்சாதிகளாக ஏற்படமாட்டார்களென்று கண்டிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஷை ஆக்ஷேபணையில் ருதுமதிவிவாஹமும்சேர்ந்திருந்தால் அதை ஏன் அவர் எடுத்துச்சொல்லக்கூடாது. அப்படிச்சொல்லாததற்குச் சிலசமாதானங்கள் யுக்தியாய்ச் சில ஆக்ஷேபக்காரர்கள் சொல்லுகிறார்கள். அவையாவன:—ஹிந்துமதத்தினர்களுக்குள் ஒருவிதி அல்லது வழக்கத்தை யநுசரித்து நடக்கக்கூடியவிஷயத்திற்குத்தான் ஷை 5 நிபந்தனைகளும் ஏற்பட்டிருக்கின்றன என்பதும், ப்ரௌடாவிவாஹம், அந்தமாதிரி ஹிந்துக்களுக்குள் ஏற்படக்கூடியவிஷயமல்லவென்பதுமாம். ஸ்மிருதிகர்த்தாக்கள் இந்த ப்ரௌடாவிவாஹம் ஒருகால் நடக்கக்கூடியவிஷயமென்பதையோசித்து ஆக்ஷேபசமாதானங்கள் கூறியிருக்கிறார்கள்.

---

(12) விவாஹத்தில் தம்பதிகளின் ஒப்பந்தப்பேச்சான மந்திரங்களெல்லாம் புத்தியறிந்தபெண்ணுக்கும் புருஷனுக்கும்நடக்கும் ஒப்பந்தப்பேச்சுக்கள்போலிருந்தபோதிலும் அவையும் வர்ணாந்தரவிஷயத்திலும், பிராஹ்மணவிஷயத்திலும் முறையே சார்த்தக கேவலமாந்திரிக ஸம்ஸ்காரங்களாய் யதாயோக்கிய முபபந்நங்களாகவேயிருக்கின்றன. இப்படிக்கொள்ளாவிட்டால் உபநயநத்தில், குரு சிஷ்யசம்பாஷணாரூபமாகவும், பிரார்த்தனாரூபமாகவும், தேவதாஸ்தோத்ரரூபமாகவும் வேத மந்திரங்கள்சொல்லப்படுவதால் உபநயநமும் வேதவாக்கியார்த்தக்கிரஹணசாமர்த்தியமுள்ளவனுக்கே செய்யவேண்டுமென்று கொள்ள வேண்டியதாய்முடியுமென்றுதோன்றுகிறது.

(13) ப்ரௌடாவிவாஹமென்பது நம்முடைய இந்துமதத்திற்கு முழுதும்புறம்பானதும் நிச்சயமாய் நேரிடக்கூடாததுமானவிஷயமாயிருக்கும்பக்ஷத்தில் அதைப்பற்றி அவர்கள் சொல்வானேன். எல்லா ஸ்மிருதிகர்த்தாக்களாலும், அநுஷ்டானத்தினாலும், கண்டிப்பாய் வர்ஜிக்கப்பட்டிருக்கிற விதவாவிவாஹத்தை 5 நிபந்தனைகளில் ஒன்றாகச் சொன்ன (14) விக்ஞாநேஸ்வரர், சிலஸ்மிருதிகளால் அங்கீகரிக்கப்பட்டதும் முன்னமே நம்முடையதேசத்தில் நிச்சயமாய் க்ஷத்திரியர்களுக்குள் அநுஷ்டிக்கப்பட்டுவந்ததுமான ப்ரௌடாவிவாஹத்தைச் சொல்லாமலிருப்பதற்கு என்னநியாயம்.

---

(13) பிரௌடாவிவாஹம் (ஹிந்துக்களுக்குள்) நான்குவருணத்துள் ஏகதேசத்திலுமில்லையென்று பிராமாணிகர்கள்சொல்லமாட்டார்களென்றேநினைக்கிறேன்.

---

(14) விஜ்ஞானேஶ்வரர் செல்லாதென்ற விவாஹங்களில் ருதுமதீவிவாஹத்தைச்சொல்லாமலிருப்பதற்கு என்னநியாயம் என்று கேட்கப்பட்டிருக்கிறது. நடந்தவிவாஹத்தைச் சட்டப்படிசெல்லாதென்ற ஐந்துதோஷங்களும் அர்த்தசம்பந்தமான தாயபாகப் பிரதிபந்தகங்களாக வர்ணத்திரயங்களுக்கும் சாமான்யமாயிருப்பதால், வர்ணாந்தரங்களில் தாயபாகத்துக்கு அர்ஹமாயும் நிர்த்தோஷமாயுமுள்ள ருதுமதீவிவாஹமானது அவற்றோடு சேர்க்கத்தகாததாகவேயிருக்கிறது. பிராஹ்மணவர்ணத்துக்குமட்டும் அது விவாஹமாகமாட்டாதென்பது நிஷேதவாக்கியங்களால் சித்தித்திருப்பதாலும் இங்குச் சேர்த்தெண்ண வேண்டுமென்னும் ஆவசியகமுமில்லை. ஆகையால் விஜ்ஞாநேஶ்வரர் விவாஹமாகமாட்டாவென்றுசொல்லியவற்றுட் சேர்த்தெண்ணாமையால் பிராஹ்மணருக்கும் ருதுமதீவிவாஹம் நிஷித்தமில்லையென்று சொல்லுவது பொருந்துமென்றுதோன்றவில்லை.

---

(15) தவிரவும், பெண் பெரியவளானபிறகுசெய்யப்படும்கல்யாணத்தினல் அவளுக்குப்பிறக்கும் குழந்தைகள் அவர்களுடையகௌரவத்தை இழந்துவிடமாட்டார்களென்றும் அப்படிப்பட்டபெண்ணை மணந்துகொள்வதனல் நிந்தைக்கு இடமானகாரியம் ஒன்றுமில்லையென்றும் பாரத அநுசாஸனபருவத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

## IV. முந்தின அநுஷ்டானங்கள்.

ஹிந்துமதத்துக்கு ஆதாரமாய் மேலேசொல்லப்பட்டவிஷயங்கள் எப்படி ஒரேநிலையாய் இந்தத்தேசத்தில் எந்தக்காலத்திலும் எந்த இடத்திலும் எல்லாஸ்மிருதிகர்த்தாக்களாலும் ஒரே விதமாகத்

---

(15) பெண் பெரியவளானபிறகுசெய்யப்படும் கல்யாணத்தினல் அவளுக்குப்பிறக்குங்குழந்தைகள் அவர்களுடையகௌரவத்தையிழந்துவிடமாட்டார்களென்றும், அப்படிப்பட்டபெண்களை மணந்துகொள்வதனல் நிந்தைக்கு இடமானகாரியம் ஒன்றுமில்லையென்றும் பாரதாநுசாசனம்சொல்லியிருப்பதாகக்காட்டி யிருக்கும்வாக்கியங்களை நான்பார்த்தமட்டும் புநர்ப்பூவிஷயமாகச்சொல்லியிருப்பதாக அறிகிறேன். ருதுமதீவிஷயமாகவேசொல்லியிருக்கும்பக்ஷத்தில்அவை இன்ன அத்தியாயத்தில் இன்னசங்கியையுள்ள சுலோகங்களென்பதை வ்யக்தமாயெழுதினல் முன்பின் சந்தர்ப்பங்களையொட்டி அவற்றின் தாத்பரியம் இன்னதென்பதும் நன்குயறியலாம். ஆயினும், எழுதியிருக்கும்வாக்கியங்களை உள்ளபடியிருப்பனவாகவேவைத்துக்கொள்வோமானலும், அவை உத்தேசிக்கும் ருதுமதீவிவாஹத்துக்கு அநுகூலங்களாகக் காணப்படவில்லை. எப்படியென்றல் ஸ்மிருதீதிஹாஸங்கள் வேதோபப்பிருஹ்மணங்களாகையால் அவற்றிற்குப் பின்னகர்த்திருத்வமிருந்தாலும் முன்சொல்லியபடி வாக்கியார்த்தங்களில் ஐககண்ட்யம் (ஒரேவிதமான அபிப்பிராயம்) இருக்கவேண்டும். ஆகையால் ஸ்மிருதியில் நிந்திக்கப்பட்ட ருதுமதீவிவாஹத்தை அந்த ஸ்மிருதிக்குவிரோதமாய்ப் பாரதாநுசாசநம் ஆதரித்திருக்கமாட்டாதென்றும், ஸ்மிருதியில் அங்கீகரிக்கப்பட்ட ருதுமதீவிவாஹத்தையே அது ஆதரித்திருக்கவேண்டுமென்றுந்தோன்றுகின்றது. இதனை அதன் வாக்கியகதியாலும் அறியலாம்.

தொடர்ந்து அநுஷ்டிக்கப்பட்டுவந்திருக்கின்றனவோ அந்தமாதிரி ப்ரௌடாவிவாஹத்தைப்பற்றி நாம் சொல்லமுடியாது. ஸ்மிருதிகளுடைய வித்தியாசமான அபிப்பிராயங்களைப்பற்றி மேலேசொல்லியிருக்கிறேன். ஆனால் முந்தினஅநுஷ்டானங்கள் எப்படியிருந்துவந்திருக்கின்றன என்பதைப்பற்றி யோசிப்போம்.

---

எப்படியென்றால் ருதுமதீவிவாஹத்தால் நிந்தைக்குஇடமுண்டா? இல்லையா? பிறக்கும்குழந்தைகள் அவர்களுக்குள்ள வர்ணகௌரவத்தை இழந்துவிடுவார்களா? மாட்டார்களா? என்ற சம்சயங்களுண்டாய் விசாரித்து நிச்சயித்திருப்பதுபோல் எழுதப்பட்டிருக்கிறது. இதில், தோன்றிய ஸம்சயமானது பிரவிர்த்தி நிவிர்த்திஜனகங்களாய்ப் பரஸ்பரவிருத்தங்களான இரண்டுஞானங்களையுடையதாயிருக்குமாகையால் அவையிரண்டு மிரண்டுபிரமாணங்களால் உண்டாயிருக்கவேண்டும். அவற்றுள், குறிப்பிட்டகாலத்துள் (அதாவது வருணந்தோறும் புருஷர்களுக்கு உபநயநத்துக்குவிதித்தகாலத்துள்) பெண்களுக்கு விவாஹம்பண்ணவேண்டுமென்பது பிரவிர்த்திஜனகம். ருதுமதிக்கு விவாஹம் பண்ணினவன் பாபியாவான் என்பது நிவிர்த்திஜனகம். இவ்விரண்டும் ஏககந்யாவிஷயத்திற் பிராப்தமாகும்போது விதித்தகாலத்திற் செய்வது பற்றித் தோஷமில்லையென்று கொள்ளலாமா? ருதுமதியானதால் தோஷமுண்டென்றுகொள்ளலாமா? என்றசம்சய முண்டாகிறது. உரிமைபற்றிய அர்த்தசம்பந்தமானவியவகாரத்திலுண்டாகும் சம்சயத்தால் வாதிக்கநுகூலம்செய்யவேண்டுமென்னும்நியாயம்போல, ருதுமதீசீக்கிரவிவாஹத்திற்பிறக்குங்குழந்தைகள், நிந்தைக்கிடமானகாரியங்கள் ஒன்றுமில்லாமையால் அவர்களுடையகௌரவத்தை யிழந்துவிடமாட்டார்கள் என்று பரியாலோசித்துத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத்தெரிகிறது. நிந்தைக்கிடமானகாரியமொன்றுமில்லையென்பதை ஏதுவாகக்கொண்டு நிச்சயிக்கப்பட்டிருப்பதால்இது நிந்தைக்கிடமில்லாத வர்ணாந்தரவிஷயமான ருதுமதீசீக்கிரவிவாஹமென்பதும், நிந்தைக்கிடமுள்ள ருதுமதீ விளம்பவிவாஹம் இங்கு விஷயமன்றென்பதும் நன்குவிளங்கும்.

ஆகையால், சாஸ்திரங்களால் ஆதரிக்கப்பட்ட ருதுமதீவிவாஹமானது விவாஹத்துக்குவிதித்த பிராயங்களி லியல்பாகநேரக்கூடிய வர்ணாந்தரவிஷயமென்றே கொள்ளத்தக்கதாயிருக்கிறது.

---

(16) சம்ஸ்காராதிவிஷயங்களிற் பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் சொற்பவிஷயங்கள்தவிர முக்கியமாய் எவ்விதவித்தியாசமும் இருந்திருப்பதாகத்தெரியவில்லை. நம்முடைய பரதகண்டத்திலுள்ள ஸ்திரீகளில் மகாபதிவிரதாசிரோமணிகளாக எண்ணப்பட்டுள்ள ராஜஸ்திரீகள் எல்லோரும் ப்ரௌடைகளானபிறகே கல்யாணம்செய்யப்பட்டிருக்கிறார்கள். ரஜஸ்வலையானபின்செய்யப்படுகிற விவாஹத்துக்கு அசாத்தியமான குற்றங்களைச்சொல்லியிருப்பதாகச்சொல்லுகிறார்கள்.

(17) ரஜஸ்வலையானகுற்றம் க்ஷத்திரியர்களுக்கு ஏன் இல்லை.

அக்னிப்பிரவேசம்செய்து சுகமாய்எழுந்துவந்த சீதையும், இறந்துபோனபுருஷனை எமனிடமிருந்துமீட்டிவந்த சாவித்திரியும், வேடனைப் பார்த்தமாத்திரத்திலெரித்ததமயந்தியும், ஏழுநாள் விடியாமலேபோகும்

---

(16) சம்ஸ்காராதிவிஷயங்களில், பிராஹ்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் நம்மால் அங்கீகரிக்கப்பட்ட சொற்பவித்தியாஸத்துள் ருதுமதீவிவாஹம் சேர்ந்ததில்லையென்பதைநிச்சயித்துக்கொண்டாலன்றி க்ஷத்திரியருதுமதீவிவாஹத்தால் பிராஹ்மணருதுமதீவிவாஹமும் தோஷமில்லாததென்றுசொல்வது சாத்தியமாகமாட்டாதென்று தோன்றுகிறது.

(17) ரஜஸ்வலையானகுற்றம் க்ஷத்திரியாதிகளுக்குமட்டும் ஏன் இல்லையென்று கேட்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரவிதிகளுக்குக் காரணம்கேட்கவும் சொல்லவும் நாம் அதிகாரிகளில்லை. ஏனென்றால் அவை சில திருஷ்டங்களாயும், சில அதிருஷ்டங்களாயும், சில திருஷ்டாதிருஷ்டங்களாயுமுள்ளன. நாம் திருஷ்டங்களைமட்டும் அறிவோமேயல்லது அதிருஷ்டங்களையறியு மாற்றலுடையோமல்லோம். மஹருஷிகளோ தபோமாஹாத்மியத்தாலும், யோகப்ரபாவத்தாலும் ஸமஸ்தவிஷயங்களையும் அறியவல்லவர்கள். காரணங்காணாமல் ஒன்றும் சொல்லமாட்டார்கள். அவர்கள் முற்றத்துறந்தவராதலால் தந்நயங்கருதாமலும், பிறர்கேடுவிரும்பாமலும், தாமுணர்ந்த நன்மையின்முடிவுகளையே சாஸ்திரங்களிற் சுருக்கிச்சொல்லியிருப்பதால், சாஸ்திரதாற்பரியங்களைநிச்சயிக்கும் மீமாம்சாதிநியாயங்களைக்கொண்டு பெரியோர்களால் நிச்சயித்தநுஷ்டிக்கப்பட்டவிதிகளைக்கடவாதுநடப்பதற்கே நாம் அதிகாரிகளாகவிருக்கிறோமென்றுதோன்றுகிறது.

படிசெய்த நாளாயினியும், தன்வஸ்திரத்தை மேன்மேலும்பெருகச் செய்து மானத்தைக்காத்துக்கொண்ட திரௌபதியும், ராஜசுகத்தைத் தள்ளிவிட்டுத் துறவியாகியகண்வனுக்குத்தொண்டுசெய்துவந்த லோபாமுத்திரையும் ப்ரௌடையானபிறகுதான் கல்யாணம்செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களைவிடச் சிறந்தபதிவிரதாசிரோமணிகள் உலகிலுண்டோ.

---

ஆயினும் கேட்டகேள்விக்கு ஒருவாறு சமாதானம்சொல்ல இடமேயில்லாமற்போய்விடவும் இல்லை.

பிருஹ்மக்ஷத்திரியவைசியர்கள் உபநயனஸம்ஸ்காரத்தால் ஒருபிறப்பிலேயே அதிருஷ்டரூபமான உயர்ந்த இரண்டாம்ஜன்மத்தையடைவதால் துவிஜர்என்னும்பெயரால் வழங்கப்படுகிறார்களென்பது யாவருமறிந்ததே. அவ்வுயர்ந்தபிறப்புண்டாக்கும் உபநயநத்துக்குரியகாலங்களும் வருணக்கிரமமாக மேன்மேலுயர்த்தப்பட்டிருக்கின்றன.

ஸ்திரீகளுக்கு உபநயனசம்ஸ்காரமில்லாமையால், அவர்களும் துவிஜராகவேண்டுமென்பதையுத்தேசித்து உபநயனத்துக்குப் பிரதியாகவேஅவர்களுக்கு விவாஹஸம்ஸ்காரம் விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவாஹஸம்ஸ்காரம் ஸ்திரீகளுக்குரியதென்றும், அவர்கள் விவாஹமில்லாமலிருக்கக்கூடாதென்றும், விவாஹமில்லாதிருந்தால் உபநயனமில்லாதிருப்பவர்போலப் பஹிஷ்கரிக்கப்படுவோர்களென்றும், புருஷன் விவாஹப்பிரதிஸம்பந்தியாய்மட்டும் இருக்கிறானென்றும், அதுவும் அவனுக்கு விதிநிபந்தனமின்றி, இச்சாநிபந்தனமாயிருக்கிறதென்றும் கொள்ளவேண்டும்.

ஆதலால் வருணந்தோறும் புருஷனுக்கு உபநயனத்துக்குவிதிக்கப்பட்டகாலங்களே ஸ்திரீகளுக்கும் விவாஹத்துக்குவிதிக்கப்பட்ட காலங்களாகின்றன. பிராஹ்மணர்களுக்குவிதிக்கப்பட்டகாலங்கள் கிரமமாகவே, ஸ்திரீகளுக்கு அநார்த்தவகாலமாகவும், க்ஷத்திரியாதிகளுக்குவிதிக்கப்பட்டகாலங்கள் ஸ்திரீகளின் ஆர்த்தவகாலமாகவும் ஸ்வபாவசித்தமாயிருப்பதால் க்ஷத்திரியகன்னிகைகளுக்கு ருதுமதீத்வம் விவாஹதோஷமாகிறதில்லை.

ஆகையால் க்ஷத்திரியகந்நிகைகளின் விவாஹத்தைக்காட்டிப் பிராஹ்மணகந்நிகைவிஷயத்திலும் ருதுமதீவிவாஹம் தோஷயுக்தமாகாதென்றுசாதிப்பது பாதிக்கப்படுமென்றுதோன்றுகின்றது.

---

(18) ரஜஸ்வலைகளில் நளாயினியைக் கல்யாணம்செய்துகொடுத்த அவள்தகப்பனாகிய அரசனுக்கும் அவளை மணம்செய்துகொண்ட மகருஷியாகிய மௌத்கல்யருக்கும், லோபாமுத்திரையின் தகப்பனாகிய அரசனுக்கும் அவளை மனைவியாகக்கொண்ட தபோநிதியாகிய அகஸ்தியருக்கும் என்னபாவங்கள் சம்பவித்தன.

ஸ்மிருதியாலேற்பட்டபாவம் ருஷிகளை எவ்விதந்தொடரும். அவர்கள் என்னவேண்டுமானாலும்செய்யலாமென்று விவகாரம்சொல்வதாயிருந்தால் அவர்கள் பாபசம்பந்தமானகாரியத்தைச்செய்ததாக ஆதரவு ஒன்றுமில்லை. மனுஷ்யஇயற்கைக்குமேலானதாக அவர்களுடைய தபோசக்தியினாற் செய்த சிலகாரியங்களை ஆதாரமாகக்கொண்டு அவர்கள் சுபாவமாகச்செய்கிறகாரியத்துக்குச் சமாதானம்சொல்லுவது ஒவ்வாது.

துரௌபதை சுயம்வரகாலத்திற் பாண்டவர்கள் பிராம்மணவேஷம் பூண்டு அங்குவந்திருந்ததாகவும், அர்ச்சுனன் பிராம்மணரூபத்துடனிருந்து மச்சேந்திரத்தை எய்ததாகவும் சொல்லப்படுகிறது. (19) இதனால் தபோசக்தியில்லாத பிராமணர்களும் ரஜஸ்வலையான க்ஷத்திரியப் பெண்களைக் கல்யாணம்செய்துகொள்ளுவதால் யாதொருபாவமுமில்லையென்று ஏற்படுகிறது. ஏனென்றால் ரஜஸ்வலையானபெண்ணை (துரௌபதையை) மணந்துகொள்ள நீ எப்படிப் பிரயத்தனம்செய்யலாமென்று அருச்சுனனை அந்தச்சபையிலிருந்த மற்றப்பிராமணர்களாவது வேறு பெரியோர்களாவது ஆக்ஷேபித்துச்சொன்னதாக இல்லை.

---

(18) ரஜஸ்வலையான க்ஷத்திரியகந்நிகைகளை மணம்புரிந்த மஹருஷிகளுக்கு என்னபாபம்ஸம்பவித்தது என்று கேட்கப்பட்டிருக்கிறதானது, அதுபோலப் பிராஹ்மணகந்நிகைகளையும் ரஜஸ்வலையானபிறகு மணஞ்செய்துகொள்வதால்தோஷமில்லையென்பதைச்சாதிக்கஎழுந்தது போலிருக்கிறது.

க்ஷத்திரியகந்நிகைகளுக்கு முன்சொல்லியபடி ரஜஸ்வலாவிவாஹம் விதிப்பிரயுக்தமாயும் நிஷேதயோக்கியமாகாமலுமிருப்பதால் விவாஹம் செய்துகொண்டவனுக்கும் கொடுத்தவனுக்கும் ஒருதோஷமுமில்லையென்றேசொல்லலாம். பிராஹ்மணகந்நிகைக்குவிதிப்ராப்தமில்லாமையால் பிரகிருதருதுமதீவிவாஹம் தோஷமுள்ளதாகவேகாணப்படுகிறது.

---

(19) தபோசக்தியில்லாதபிராஹ்மணனும் க்ஷத்திரியகந்நிகையைக் காமார்த்தமாக விவாஹம்செய்வதில் கௌணபக்ஷத்தில் சாஸ்திரஸம்மதமிருப்பதாலும், க்ஷத்திரியகந்யாவிவாஹத்துக்கு ரஜஸ்வலாதோஷமில்லாமையாலும் பிராஹ்மணரூபியாய் க்ஷத்திரியகந்யாவிவாஹத்திற்பிரவிர்த்தித்தஅர்ஜுனனைப் பிராஹ்மணர்களாக்ஷேபிக்கவில்லையென்றுதோன்றுகிறது.

நடந்தேறிவந்திருக்கிற கல்யாணவிஷயங்களில் க்ஷத்திரியப்பெண்களின்கல்யாணங்களைப்போல் (20) பிராமணப்பெண்களின்விவாஹங்களைப்பற்றி விமர்சையாகச்சொல்லப்படவில்லையென்றுதெரியவருகிறது. அதனால் பிராமணர்களுக்குள் அந்தமாதிரிவழக்கமில்லை என்று சொல்லமுடியாது.

ஆயினும் மேலேசொன்னபடி (21) கல்யாணத்திற்சொல்லப்படுகிற மந்திரதாத்பரியங்கள்1. (22) கல்யாணமான 4-வதுநாளில் புருஷன்வீட்டிற் பெண்ணானவள் கணவனுடன்சேரத்தக்கநிலையையடைந்து, ஸ்திரி புருஷர்கள் பள்ளியறையிலிருக்கவேண்டியதாகச்சொல்லும்விஷயம் 2, (23) எவ்வளவுகண்டிப்பானஸ்மிருதிகர்த்தாக்களும் ப்ரௌடாவிவாஹத்தை விவாஹமேஆகாது என்று வர்ஜித்துத்தள்ளாதவிஷயம் 3,

---

(20) ருதுமதீவிவாஹம் பிராஹ்மணகோஷ்டியிலில்லையென்பது அநுபவசித்தமாயிருக்கச்செய்தே, அது உண்டென்பதற்குச் சரித்திரங்களில்விமரிசையாய்ச்சொல்லப்படவில்லையென்பது சாக்ஷியாகமாட்டாதென்றுதோன்றுகிறது.

(21) கல்யாணத்திற்சொல்லும்மந்திரங்களும், விவாஹத்தின் நாலாவதுதினத்திற்செய்யுங்கெர்ப்பாதானமும் ஸம்ஸ்காரவிசேஷமாகையால் யதாயோக்கியம் மாந்திரிகமாகவும், சார்த்தகமாகவுமிருக்கக்கூடுமாகையால் அவை ருதுமதீவிவாஹத்துக்குநிரூபகங்களாகுமென்று தோன்றவில்லையென்று முன்னமேசொல்லப்பட்டது. மந்த்ரஸம்ஸ்காரங்களுக்கு அர்த்தாநுபவயோக்கியதாபாதநம்வேண்டியதில்லையென்பதை உபநயநாதி ஸம்ஸ்காரங்களாலுமறியலாமென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

(22) கல்யாணமானநாலாநாளிற்செய்யுங்கிரியையானகெர்ப்பாதானமானது ஸம்ஸ்காரவிசேஷமென்றுகொள்ளப்படுவதால் அது சார்த்தகமாயிருக்கவேண்டுமென்னும்நியமமில்லையென்று முன்னமே சொல்லப்பட்டது.

(23) மூன்றாவதுயுக்திக்குச்சமாதானம்:— வர்ணாந்தரவிஷயங்களிற் பெரும்பாலும் ருதுமதீவிவாஹமே ஸம்பாவிதமாயிருப்பதாலும், காந்தருவத்தில் ருதுமதீத்வம் நியதமாயிருக்குமாகையாலும் ஸ்மிருதிகர்த்தாக்கள் அடியோடுகூடாதென்றுநிஷேதிக்கவில்லை. ஆகையால் அது உத்தேசவிஷயமானருதுமதீவிவாஹத்துக்குச்சாதகமாகமாட்டாதென்றுதோன்றுகிறது.

(24) காந்தர்வவிவாஹம் ஒன்றுதவிர மற்றவிஷயங்களில் பிராமணர்களைப்போல் விவாஹசம்ஸ்காரவிஷயத்திற் சமத்துவமாக இருந்துவந்த உத்தமமான க்ஷத்திரியவகுப்புப்பெண்கள் ப்ரௌடையானபின் விவாஹம்செய்துகொண்ட உதாரணங்கள் 4, (25) அப்பேர்ப்பட்ட பெண்களைப் பெற்றோரும் பிராமணோத்தமர்களானருஷிகளும் பாவங்களுக்கு ஆளாகாமல் முறையே கல்யாணம்செய்துகொடுத்தும் செய்துகொண்டுமிருக்கிறவிஷயங்கள் 5, ஷை ஸ்மிருதிகர்த்தாக்களிற் பெரும்பான்மையோர் ஷை 2-வதுவிஷயத்தையநுசரித்து, 4-வதுநாளிற் சாந்திமுகூர்த்தம்நடக்கவேண்டுமென்றுசொல்லியிருப்பது 6, ஆகிய இவைகளினால் இந்த ப்ரௌடாவிவாஹமென்கிறவிஷயமானது, சுருதி யுக்தி, அனுபவங்களைக்கொண்டு ஆராய்ந்துபார்த்தால் ஆக்ஷேபணைக்கு இடமானதல்லவென்று தெரியவருகிறது.

தவிரவும், நமதுசாஸ்திரத்தில் எட்டுவிதகல்யாணங்கள்சொல்லப்பட்டு அதில் 4 விவாஹம் அங்கீகரிக்கத்தக்கவையென்றும், 4 விவாஹம் அங்கீகரிக்கத்தகாதவையென்றும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இப்பொழுதும் முந்தியும் பெண் அகப்படுவது கஷ்டமாயிருக்கிற சிலவகுப்பார்களுக்குள்ளும், பெண்ணை இளையதாரமாகக்கொடுப்பவர்களுக்குள்ளும் பெண்வீட்டுக்காரர்கள் பணம்வாங்குவது வழக்கமாயிருக்கிறது. பெண்வீட்டுக்காரர்கள் பரிசம்வாங்குகிற சூத்திரஜாதியார்களைப்பற்றி நான்சொல்லவில்லை. பிராமணர்களுக்குள்ளேயே இவ்வழக்கம் இருந்துவருகிறது.

---

(24) 4-வதுயுக்திக்குச்சமாதானம்:— பிரஹ்ம க்ஷத்திரிய வைசியப்பெண்களுக்கு அவரவர்வருணக்கிரமமான உபநயநகாலங்களே விவாஹகாலங்களாகத் தத்வத்பாவசித்தமாயேற்பட்டிருப்பதால் ஆர்த்தவகாலசித்தமான க்ஷத்திரியகந்யாவிவாஹத்தைக்கொண்டு அநார்த்தவகாலசித்தமான பிராஹ்மணகந்யாவிவாஹமும் ருதுமதீவிவாஹமாயிருக்கலாமென்றுகொள்ளுவது பொருந்தாதென்றுதோன்றுகிறது. அப்படிக்கொள்வதாயிருந்தால் அதோடுசேர்ந்துள்ள அந்யஜாதிவிவாஹமும் நிஷித்தமில்லையென்றுகொள்ளவேண்டுமென்னும் அநிஷ்டாபத்தியுண்டாகக்கூடுமாகையா லதையுதாரணங்காட்டுவது பொருந்தாதென்றுதோன்றுகிறது.

---

(25) 5, 6-வதுயுக்திகளுக்குச்சமாதானம் முன்சொல்லப்பட்டது.

---

(26) ஷை விவாஹங்கள் அங்கீகரிக்கத்தகாத ஆசுரவிவாஹமாயிருந்தபோதிலும் நடவடிக்கைகளில் ஷை விவாஹத்துக்கும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறவிவாஹங்களுக்கும் ஒருவித்யாசத்தையேற்படுத்தி, அக்கல்யாணத்திற்சம்பந்தப்பட்டவர்களையாவது அவர்களுடைய குழந்தைகளையாவது மரியாதைக்குறைவாகநினைக்கப்பட்டதாக இல்லை.

(இன்னும் வரும்.)

M. R. ஸ்ரீநிவாஸையர்,
பெரியகுளம்.

---

(26) பெண்ணுக்குப் பணம்வாங்கிக்கொண்டு விவாஹம்செய்துகொடுக்கும்வழக்கமிருந்தபோதிலும் அது ஆசுரவிவாஹமென்று சொல்லத்தக்கதன்று. ஏனென்றால், பெண்ணைப் பாணிக்கிரஹணம் செய்தவுடனே வரகிருஹத்தில் நாலுநாள்கல்யாணமும்நடத்திக்கொள்ள வேண்டியதென்பதும், அதற்குச்செல்லும், திரவியச்செலவும் வரனுடையதாயிருக்கவேண்டுமென்பதும் சாஸ்திரஸம்மதம். ஸௌகரியத்தையுத்தேசித்துக் கந்நிகையின்பிதுருகிருஹத்தில் நடத்துவதற்காகப் பிரதிப்ரயோஜனமாகவே சோபநத்திரவ்யம் ஏற்பட்டிருப்பதல்லது கந்நிகையின்கிரயத்தொகையாகக்கொள்ளப்படுவதன்று. சங்கல்பத்திலும் அநுக்ஞையிலும் பாரிஷதர்முன்பாகப் பிராஜாபத்தியஸம்ஸ்காரமென்றேசொல்லப்பட்டுவருவதன்றி ஆசுரஸம்ஸ்காரமென்றுசொல்லுவதுமில்லை. ஆதலால் அவர்கள் பஹிஷ்கரிக்கப்படுகிறார்களில்லை. ஆயினும் இவ்வழக்கம் சாஸ்திரவிருத்தமாகவேதோன்றுகிறது. இக்காலத்தில் வரதக்ஷிணைவிருத்தியடைந்துகொண்டுவரவர இவ்வழக்கம் தானேக்ஷீணித்துக்கொண்டும்வருகிறது.

---

இன்னும் வருவனவற்றையெல்லாம் பரியாலோசித்துக்கொண்டு பின்பு முடிவுரைசொல்லப்படும்.

திரு. நாராயணையங்கார்,
செந்தமிழ்ப்பத்திராதிபர்.

# உயிரின் தன்மை.

## (பசுலக்ஷணம்.)

"செந்தமிழ்" (தொகுதி-கக-பகுதி கூ-ல்) ௬௩அ-ஆம்பக்கத்தொடர்ச்சி.

முன்னமே நாம் உதகரித்திருக்கும் உமாபதிசிவத்தின் உண்மைத்திருக்குறளுக்குப்பதில், இருளில் இருளாகியும் ஒளியில் ஒளியாகியும் உள்ள உலகியற்பொருள்கள் படிகம், நீர், கண் என்பார்கள். கண், இருளில் சக்தியற்றும், ஒளியில் ஒளிபெற்றுமுள்ளது. பளிங்கும் அவ்வண்ணமே. நீரின் தன்மை முன்னே விசாரித்தாம். பின்னும் பேசுவாம். ஆயினும், பண்டைநூல்களிலுள்ள உதாரணம் படிகம் ஒன்றுதான். இது சாங்கிய யோகசூத்திரங்களுள் உள்ளது.*

---

* ஈங்கு அவைகளையும் மற்றுமுள்ள மேற்கோள்களையும் காட்டுவாம்.

"செம்பருத்தியும் பளிங்கும்போல, உயிர் பற்றடையவில்லை. அடைந்தது போற் பாவித்தது." (சாங்கிய சூ. VI. 28.)

"சித்தவிகாரங்கள் எல்லாம் அறவே ஒழித்த ஒருவனிடம் ஞாதுரு, ஞானம், ஞேயம் எல்லாம் ஒன்றுபடுகின்றன, பிரகாசமுள்ள படிகத்தைப்போல்." (யோக சூ. I. 31.)

"இப்போது, ஒருவன் தன் ஒழுக்கத்தின்படி இதுவாவது அதுவாவது போன்று அதுவிது ஆவன். நல்லொழுக்கமுடையவன் நல்லவனாவன். கெட்ட ஒழுக்கமுடையவன் கெட்டவனாவன். தூய செய்கைகளால் தூயவனாகவும், தீய செய்கைளால் தீயவனாகவுமாவன்."

"அவன் ஆசைவழி, அவன் இச்சை; அவன் இச்சைவழி, அவன் தொழில். என்னென்ன தொழில்செய்கின்றானோ, அவற்றின்பயனை அவன் அனுபவிப்பான்."

"அவன் மனம் எதனிற் பற்றுகின்றதோ அதனிடம் தன் கர்மங்களோடு கெட்டியாக ஒற்றுமையுறுகின்றான்."

"எவன் பரமாத்மாவைப்பற்றுகின்றானோ அவன் பிரமத்தினிடம் செல்கின்றான். அந்த உயிர்தான் பிரமம்." (பிருஹதாரண்யக உபநி. IV. 5, 6.)

"தூசியினால் மலினப்பட்ட கண்ணாடி, விளக்கினபின் எங்ஙனம் பிரகாசிக்கின்றதோ, அங்ஙனம் தன் உண்மையியல்பை யுணர்ந்தபின், பிறப்புற்ற புருஷனும் துக்கத்தினின்றும் நீங்கிச் சாந்தமடைகின்றான்."

"தன் உண்மையுணர்ந்தபின், விளக்கைக்கொண்டு பிறபொருளைப்பார்ப்பது போலப் பிரமத்தின் உண்மை இயல்பை உணர்கின்றான். நித்தனும் பிறப்பிலியுமான எல்லா தத்துவங்களையும் கடந்த தேவனை உணர்ந்தபின், எல்லாப்பாசங்களினின்றும் விடுபடுகின்றான்." (சுவேதாசுவதர உபநி-II 14, 15.)

"அவனை தியானிப்பதனாலும், கூடுதலினாலும் (யோகவழியாய்) அதுவதுவாதலினாலும் (தத்பாவாத்) முடிவாக மாயை முளையாதென்க." (do. I 10.)

"ஒருவன் தான் எவர்களோடு வாழ்கின்றானோ, எவர்களை வணங்குகின்றானோ, எதனைப்போல் ஆகவேண்டுமென்று இச்சிக்கின்றானோ அவர்களைப்போலும், அதைப்போலும் ஆகின்றான்." (மகாபா. சாந்திபர்வ. ccc. 32.)

கீதாவசனம் முன்னர்க்காட்டியிருக்கின்றாம்.

"வந்தெனுடல்பொருளாவிமூன்றுந்தன்கை
வசமெனவேயத்துவாமார்க்கநோக்கி
ஐந்துபுலனைம்பூதங்கரணமாதி
அடுத்தகுணமத்தனையுமல்லையல்லை
இந்தஉடலறிவறியாமையுநீயல்லை
யாதொன்றுபற்றினதனியல்பாய்நின்று
பந்தமறும்பளிங்கனையசித்துநீயுன்
பக்குவங்கண்டறிவிக்கும்பான்மையேம்யாம்"
—தாயுமானசுவாமிகள்.

மேல், இந்தப் பளிங்கு அல்லது கண்ணாடி உதாரணத்தை விசாரிப்பாம். நம்முன்னே மாட்சிமைபொருந்திய நம்மகாசக்ரவர்த்தி (அவர்நீடூழிவாழ்க) யின்படம் உளது. நாம் அதைப்பார்த்த அளவில், அந்தப் பன்னிறங்கவர்ந்தபடத்தைமூடியிருக்கும்கண்ணாடி நம்கண்ணுக்குத் தோன்றவில்லை. கண்ணாடியைப்பார்க்காதநாட்டுப்புறத்தான், அல்லது கண்ணாடிப்படத்தைப்பார்க்காத ஒருவன், அதைப்பார்க்கும்போது ஆங்குக் கண்ணாடியில்லையென்றேசாதிப்பன். அவன் அவ்வண்ணம் தான் நேரேபார்த்தபார்வையில் (சுவாநுபூதியால்) உறுதிகூறினும், நாம் அவன்சொல்வது தவறென்றே கொள்வோம். ஏன் இப்படி அவன்சொல்கின்றான் எனின், கண்ணாடி பன்னிறப்படத்தோடுசேர்ந்ததும், தன்சொரூபம்முழுதும்மறைந்து தானும்கெட்டுப்போய்விட்டதென்றேசொல்லவரும். அப்படியும் தன்னுருவம்கெட்டதேயன்றி, தன்லிங்கம்கெட்டதில்லை. படத்தை எடுக்கவும், கண்ணாடியைப்பார்க்கலாம். அக்கண்ணாடியைச் சூரியவெளிச்சத்திற்கொண்டுவரின், அப்பொழுதும் கண்ணாடியைப்பார்க்க முடியாது. பளிச்சென்று சூரியவெளிச்சம் நம்கண்ணைப்பறிக்கும். ஆகவே, கண்ணாடியின்தன்மை எதனுடன்சேர்ந்ததோ அதன் வண்ணமடைந்து தன்வண்ணம்மறைந்துநிற்றலாகும். வர்ணம்,அழுக்குப்படிந்தபொழுதும், ஒளிபொருந்தியபோதும்,அவ்வழுக்கினின்றும் ஒளியினின்றும் வேறுபிரிக்கக்கூடாததாகிறது. கண்ணாடியைமட்டும் சோதித்தால், அது தூய்மையும் பிரகாசமும்பொருந்தியுள்ளது; ஆயினும், இது அழுக்குடன் அழுக்காகவும், இருளில் இருளாகவும் இல்லாமற்போகவில்லை. இதுதான் இதன்தூர்க்குணம். இத்தூய்மையும் பிரகாசமும், சூரியனுடையதூய்மை, பிரகாசம் இவற்றினின்றும் வேறு என முக்கியமாய் உணரவேண்டும். ஒரு பெரியவயிரக்கல்லை

எடுப்போம்.* (ஆங்கிலத்தில் அதற்கு (brilliant) பிரகாசமுள்ளது என்று பேரிட்டுப் போலிப்பேர்). அதிற்காணும் ஒளி அதனுடையதா? அதனுடையதானல் அடர்ந்த இருளிலும் பிரகாசிக்கவேண்டும். அவ்விருளில் அதைக் கண்டெடுக்கமுடியாது. ஆகையா லிதன் ஒளி, இதனுடையதன்று. சூரியன் அல்லது விளக்குவெளிச்சத்தினின்றுமே பிரதிபலித்தது. இதுதான் மனிதனுக்கும் கடவுளுக்கும் வேறுபாடு. நாம் வயிரக்கற்கள். கடவுள் அவற்றின் ஒளிக்கும் ஒளி. இவ்வுண்மை நம் அப்பர்சுவாமிகள்தேவாரத்தில் "வெண்பளிங்கின் உட்பதித்தசோதியானே:" என்பதில் எவ்விதநலமுடன் இருக்கக்காண்கின்றோம். டென்னிசன்புலவரும் நாம் "கடவுளின் பகுக்கப்பட்ட ஒளிகள்" என்றார். அற்றன்று. நாம் அவனினின்றும் இரவல்வாங்கின ஒளியைக்கொண்டே ஒளிர்கின்றோம். "அறிவித்தாலன்றி அறியா வுளங்கள்", நம்மிடம் என்னென்ன நலமிருக்கின்றனவோ அவையெல்லாம் அவனதுடைமை. கேவலஅவஸ்தையில், நாம் சேற்றிற்பதித்த வயிரம்போலானோம். அதினின்றும் எடுத்தபோது, அழுக்கு இன்னும் ஒட்டியிருக்கின்றது. அதைக்கழுவிச் சாணையில்வைத்துத் தீட்டவும், அதிற் சோதியை மேலும்மேலும் உள்விடுகின்றோம். இதுதான் நம்முடைய சகலநிலை. இதில் நம்மறிவும் இச்சையும் பரமனருளால் விளங்கவருகின்றது.

முழுக்கல்லும்தீட்டிச் சுத்தப்படுத்தியபோது, முழுச்சோதியும் உட்கலந்து ஒரேவெளிச்சமாய், கல்லும் அதில்மறையும். இதுதான் சுத்தநிலை அல்லது வீட்டுநிலை. அழுக்குமுடியபோது பந்தம். அழுக்கற்றபோது வீடு. இந்நிலை அழுக்கற்றநிலைமட்டுமன்று. ஒளியும் உட்பதிகின்றது. அதுதான் சுவாநுபூதி, சிவாநுபூதி. வயிரக்கல்லை, அவ்வளவு சுத்தப்படுத்தியும், அதிற் பிரகாசமில்லாவிட்டால் அதனை யாவரேனும் விலைமதிப்பரோ? மதியாரென்பதே திண்ணம். நாம் சுத்தமடைவதும் அவன் ஒளியை அனுபவிப்பதற்கே. தெய்வீகம்பொருந்திய அருணகிரிநாதரும் இவ்வுண்மையை எவ்வளவு எளிதாகவும் நுண்மையாகவும் நமக்கு உபதேசிக்கின்றார்.

* பட்டைதீர்த்தவயிரம் பட்டைக்கண்ணாடியைப்போன்று ஒளியைப் பலவர்ணங்களாகப்பிரிக்கும். தூய்மையானநீருக்கும் இந்தச்சக்தியுண்டு. (ஆங்கிலத்தில் பளிங்குநீர் என்றே சொல்வது.) இந்நீர் ஒளியின்வர்ணங்களைப்பிரிப்பதை மகாநந்திக்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தத்திற்பார்க்கலாம்.

"தூசாமணியும்துகிலும்புனைவாள்
நேசாமுருகாநினதுஅன்புஅருளால்
ஆசாநிகளம்துகளாயினபின்
பேசாஅநுபூதிபிறந்ததுவே."

திருமூலதேவநாயனாரின் திவ்யமொழிகளையும் சிந்திப்பாம்.

"உறைபற்றதொன்றையுரைசெய்யுமூமர்காள்
கரையற்றதொன்றைக்கரைகாணலாகுமோ?
திரையற்றநீர்போல்சிந்தைதெளிவார்க்குப்
புரையற்றிருந்தான்புரிசடையோனே."

ஆசையறுதலும், சிவாநுபூதிபிறத்தலும், சிந்தைதெளிதலும் பிறப்பிலிப்பிஞ்ஞகன்தேசோமயம்பிரகாசித்தலும் ஓர்ந்துணர்க.

மணியின்தூய்மையையும், நீரின்நிர்மலத்தையும் நாம் அவாவுகின்றோம். இயற்கைப்பொருள்களினுள்ள எல்லாநலத்தையும் நாம் நச்சுகின்றோம். புருஷன் மனைவியையும், தந்தை பிள்ளைகளையும் ஏன் நேசிக்கவேண்டும்? நாம்அவைகளை இச்சிப்பதும் அவைகளின் பொருட்டோ? அப்படியானால், நம்முடையகட்டும் வலுப்படும். பொன்னிலும், பெண்ணிலும் நம்ஆசை மேலும்மேலும்அதிகரிக்க, அதைத்தேடுதலிலேயே நம்மறிவு ஆழ்ந்து அழுக்குப்படும். அவற்றின் அழகையும் ஒளியையும் அன்பையும்தரும் பரமேஸ்வரனது அருளை நாம்அவாவுவதாக எண்ணும்பக்ஷம், அவைகளிலே மனம்பற்றுது அவனிடம் பற்றுண்டாகுமன்றோ? உண்டாகவும் நாம்விரும்பும் வீடும் எளிதன்றோ?*

---

*பின்வரும் பிருஹதாரண்யகசுருதிகளின்பொருளும் இதுவன்றோ?

"அவனை இச்சிக்கும்பொருட்டன்று, ஒருபுருஷனும் உனக்கு உவப்பாக இருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டே உன்புருஷனும் உனக்கு உவப்பாயிருப்பது"

"அவளை இச்சிக்கும்பொருட்டன்று, ஒருமனைவியும் உனக்கு உவப்பாயிருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டு உன்மனைவியும் உனக்கு உவப்பாயிருப்பது."

"உன்மக்களை இச்சிக்கும்பொருட்டன்று, அவர்கள் உனக்கு உவப்பாயிருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டு, உன் மக்களும் உனக்கு உவப்பாயிருப்பது."

"உன்பொருளை இச்சிக்கும்பொருட்டன்று, உன்பொருளும் உனக்கு உவப்பாயிருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டு, உனக்குப் பொருளும் உவப்பாயிருப்பது."

மேலும், கல்லினழுக்கோ உயிரினழுக்கோ, அவைகளை ஊடுருவிச்செல்வதன்றெ ன நாம் ஈங்கு உணரவேண்டும். அப்படியானால், அவ்வழுக்கு என்றும் நீங்காது. முதலிலேயே, மனிதன் அறிவிலியும் அசுத்தனுமாகி, படிப்பினாலும் பழக்கத்தினாலும் பலபிறப்பினாலும், மேலும்மேலும் அறிவையும் சுத்தத்தையுமடைகின்றானில்லை. அவன் அறிவு இச்சை தொழிலாகிய எல்லாச்சக்திகளும் அவனிடம் அன்றேயிருந்தது. ஆயின் அச்சக்திகளெல்லாம் மாயை ஆணவம் எனும் திரையினால் மூடப்பட்டிருந்தது. அத்திரைநீங்கவே, தன்னறிவு தனக்குத்தோன்றித் தான் எல்லாமாயிருத்தலைக்கண்டு (ஆத்மதரிசனம்) உடனே ஆநந்தத்தாண்டவம்புரியும் நம் நடேசனைத்தரிசித்து (ஆருத்ராதரிசனம் - சிவதரிசனம்) அவனடிக்கீழ் ஆழ்கின்றான். இப்பாகுபாடு முக்கியமானது. ஏனெனில், மேலைநாட்டுத் தத்துவஞானத்துக்கும் நம் இந்தியநாட்டு ஆன்மஞானத்துக்கும் உள்ள வேறுபாடும் இதுவாதலின்.

இந்தக் காரணத்தினால்தான் ஐரோப்பிய சிருஷ்டிலயதத்துவஞானம் (Theory of Evolution) பிழைபடுகின்றது. மேற்படையெல்லாம் சரியே, அடிப்படை அவ்வளவும் பிழை. இதன்படி மனிதனுடைய ஒவ்வொருசக்தியும் கொஞ்சம்கொஞ்சமாகச் சனனச்சுழற்சியாலும், ஏற்பன ஏற்றலாலும், மேலது நிலையுறுவதாலும் உண்டாகிப் பலப்படுகின்றதென்பதே. ஆயின் நம்மவர்கூற்றோ, மனிதனுடைய எல்லாச்சக்தியும் அன்றே ஆங்கிருந்தது. அவன் சச்சிதானந்தன். அவன் சக்திகள் மூடப்பட்டிருந்தன. இறைவன் பஞ்சகிருத்தியமும், இறப்பும் பிறப்பும், அவன்மறைப்பை நீக்குவதற்காகவே ஏற்பட்டன. இத்திரைநீங்கவே, அவன் உண்மையுருவமடைகின்றான்.* இங்கும் இன்னமொரு எச்சரிப்பு நாம்செய்யவேண்டும்.

உயிர் தன் முழு இச்சாஞானக்கிரியைகளைப்பெற்று, சச்சிதாநந்தமடைவது உண்மையே. ஆயின் இவ் விச்சையாதிகளையும்,

*இவ்வுண்மை, கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பீயர் முதலியவர்கள் அரும்புலவர்களானதை நிலையுறுத்தும். ஐரோப்பியஞானத்தின்படி இயலாது. ஒவ்வொருவருடைய மூளையிலும் இயற்கையமைப்பும் உண்மையும் என்றும் பதிந்துகொண்டேயிருக்கிறது. வலியின்மையாலும், அறியாமைமறப்பினாலும் அவற்றை எடுத்துச்சொல்லவும் வர்ணிக்கவும் முடியாமையாகிறது. தெய்வ அருளினால், இத்திரைநீங்கப்பெறவும், அவர்கள் வன்மையுடையவர்களாகிறார்கள். உள்ளதே தோற்றும். இல்லது வாராது.

சச்சிதானந்தத்தையும், இறைவனுடைய இச்சையாதிசக்திகளையும், பகுத்துணரவேண்டும். இங்கே, உபநிடதங்களில், விடுபட்ட உயிரின் உயர்வைப்பற்றிப்பேசும் சுருதிகளைத் தப்பாகப்பொருள் கொண்டு, உயிருக்கும் கடவுளுக்கும் ஏகத்வம் சாதிக்க எண்ணுகிறார்கள். உயிரும் இறைவனும் ஒன்றுபட்டாலும், பந்தமறுத்தஉயிரிற்காணப்பட்டது பரமாத்மாவின் தேசோமயமாகி, ஆன்மாவும், அவன்பரமானந்தத்தில்திளைத்து அவனடிக்கீழ்த் தானதுவாகுந் தன்மையாற் சார்கின்றது. ஆங்கு, உயிர் பரமசுகமடைகின்றது என்பது உண்மை. ஆயின், அது தானடைந்தேன் என்று முனைத்து உணராது. அங்கே அது காணமற் காண்கின்றது. கேளாமற் கேட்கின்றது. முகராமல் முகருகின்றது. சுவையாமற் சுவைக்கின்றது. நினையாமல் நினைக்கின்றது. 'நான்' என்னும் ஞானம் ஆங்கு உதயமானால், ஏகத்வம் நசித்துப் பரமசுகமுமற்றுப்போம். இதுவன்றோ பேர்போன பிருஹதாரண்யகசுருதியின்பொருள்.

"ஆங்கு அவன் நோக்கவில்லை. ஆயினும் அவன் நோக்குகின்றான், நோக்காமல்நின்றானாயினும் காண்கின்றவனுடன் காட்சி வேறன்மையாதலாலும், அது நசிக்கமாட்டாதாதலாலும், ஆயினும் ஆங்கு இரண்டாவதொன்றில்லையே. தன்னைவிட வேறாகக்காண்பதற்கு வேறுபொருள் இல்லையே." IV. 3. 23.

இந்தநிலையை மோக்ஷமூலபண்டிதர் சுழுத்தி அவஸ்தையென்றார்; துரியம் துரியாதீதம் உள்பட எல்லாஅவஸ்தைகளையும் கடந்த நிலை ஒன்று உளதென அவர்அறியாமையால். 21-வது மந்திரத்தில், ஆங்குத் தனக்கு உள்ளும்புறம்பும் ஒன்றையும் அறிந்ததில்லை என்று சொல்லியதில் உண்டாகும் மயக்கத்தைத்தீர்க்கவே இந்தச்சுருதியும் எழுந்தது. ஒன்றும் அறியாதபக்ஷப், சூன்யகேவல அவஸ்தையாகும். அற்றன்று. ஆங்குப் பூரணஅநுபவமுண்டு. காண்பதுமுண்டு. கேட்பதுமுண்டு. ஆனால் நான் அறிந்தேன், கண்டேனென்ற ஞானமில்லை. தலைவன்தலைவி யின்புறுதல் எல்லாச்சித்தாதியோகிகளுக்கும் முக்கிய உதாரணம்.

உய்யவந்ததேவநாயனாரும் தம் திருவுந்தியாரில், இச்சுருதியையே விளக்கியுள்ளார்.

"பெற்றசிற்றின்பமேபேரின்பமாயாங்கே
முற்றவரும்பரிசுந்தீபற
மூளையாதுமாயையென்றுந்தீபற"

"பேரின்பமானபிரமக்கிழத்தியோ
டோரின்பத்துள்ளானென்றுந்தீபற
உன்னையேயாண்டானென்றுந்தீபற"

பின்னர்க்காட்டப்படும் 21 மந்திரத்தோடு இவற்றை ஒத்திட்டுப்பார்க்க.

"ஆசை, கேடு, பயம் அற்ற (உண்மைச்) சொரூபம் இதுவே. ஒருவன் தன்காதலியைக்கூடினபோது, உள்ளும்புறம்பும் 'எப்படி அவனுக்குத்தெரியாதோ, அவ்விதம், வாலறிவன் இவனை அணைந்த போது, இவனுக்கு உள்ளும் தெரியாது. புறம்பும் தெரியாது. இது தான் அவன் உண்மைச்சொரூபம். அதில் அவன் எல்லாவிருப்பும் நிறைவேறப்பெற்றது. அதில் அவன்விருப்பும் இறைவனே. ஒன்றும்விடுபட்டதில்லை. துயரற்றது அதுவே."

இதன்பொருளும் இது. தான் அதுவாய், தன்னெல்லாக்கரணங்களும் அழிந்து அன்புமாத்திரையாய்நிற்பதுதான் சிற்றின்பத்திலும் முற்றின்பம். தாய்தந்தைகள் எவ்வளவோ அறிஞர்களாயும், தூயவர்களாயுமிருந்தாலும் பிள்ளைகள் மூடர்களாகவும், ஏழையறிவுடையவர்களாகவும், தீயகுணமுடையவர்களாகவுமிருப்பதின்காரணம், அவர்கள் இவ்வண்ணம் மனமற்று அனுபவியாதது என்கிறார்கள். அதுவதுவாகாததனால், அவர்களுடைய நற்குணங்கள் பிள்ளைகளுக்கு ஏறவில்லை. குடியர்களுடைய பிள்ளைகளும் இவ்விதமே. இதேவண்ணம்தான் பேரின்பத்தைநுகர்வதிலும் சொல்லியிருக்கின்றது. ஆங்கும் அதுவதுவாகவேண்டும். கரணங்கள் எல்லாம் ஒய்கின்றது. பரமாநந்தப்பழஞ்சுடரில் நாம் மூழ்குகின்றோம்.

இவ்வியல், தமிழகப்பொருளிலக்கணத்திற் காணப்படும், ஸ்ரீமத் மணிவாசகப்பெருமானின் திருக்கோவையார் இதற்குச் சிறந்தஇலக்கியம். ஸ்ரீமத் தாயுமானசுவாமிகளின் ஆநந்தக்களிப்பை நுகர்ந்தோர் இதனை உணர்ந்தோராவர்.

நோக்காதுநோக்கல், 'கேளாதுகேட்டல், நினையாதுநினைத்தல் என்ற சொற்றொடர்கள் சுட்டறவுணர்தல் என்னும் பான்மைத்து. நம் சாதாரணஅறிவில், நான் அது என்ற காண்பானும் (subject) காட்சிப்பொருளுமாகிய (object) இருவித அறிவுநிகழும். சுட்டறவுணர்தலில் இரண்டற்று, காண்பான் காட்சிமுதலிய ஒன்றாய், ஆநந்த மாத்திரையேயாகி, அறிவு அடங்கிநிற்கும். கடவுளைச் சுட்டுப் பொருள்போல் உணர்ந்தால், அதுவும் சடப்பொருளாய் ஒழியுமன்றோ? சுருதியும் நம் சித்தாந்தநூல்களும் பின்வருமாறு முழங்குகின்றனவன்றோ?

"இவற்றையெல்லாம் எவனால் அறிந்தானோ அவனை எப்படி அறிவது? அறிவிப்பானை இவன் எப்படியறிவது."(பிருஹதா II. 4. 13.)

"நீ காட்சியைக்காண்பானைக் காணமாட்டாய். ஓசையைக்கேட்பானை நீ கேட்கமாட்டாய். சிந்தனையைச் சிந்திப்பானை நீ சிந்திக்க மாட்டாய். அறிவை அறிவானை நீ யறியமாட்டாய். இதுவே எல்லாவற்றுள்ளும் உன்னுள்ளும் உள்ள பரமாத்மா." (Do. III. 5. 2.)

"அன்னியமிலாமையானும்அறிவினுள்நிற்றலானும்,
முன்னியவெல்லாமுண்ணின்றுணர்த்துவனுதலானும்
என்னதியானென்றேதுமிருஞ்செருக்கறுத்தலானும்
தன்னறிவதனுற்காணும்தகைமையனல்லனீசன்"
(சிவஞானசித்தி. VI. 8.)

முடிவில் நாம்சொல்வது, இதுகாறும் கூறிப்போந்த இச்சீவலக்ஷணம் அறிஞர்யாவரும் விதந்து ஒப்புக்கொள்ளத்தக்கதென்பதுதான். என்றாலும், சென்ற 50 வருடங்களுக்குள் கிறிஸ்தவமதத்தையே சீர்படுத்தியவராகக்கூறும், காலஞ்சென்ற ஹென்றிடிராம்மண்டு பண்டிதரைச் (Professor Henry Drummond) சான்றாகக் கூறுவோம். அவர்எழுதிய 'மறுவாழ்வு' (Changed Life) என்னும் அரியநூல், மெய்கண்டநாதருடைய 'அதுவதுவாதல்' என்னும் சொற்றொடருக்கு அரிய விருத்தியுரையாகும். அவர் மேற்கோளாகக் கொண்டது பால்அபோஸ்தலர் வாக்கியங்களில் ஒன்று.

"நாம்யாவரும், நம் முகத்திரையைநீக்கியபின் கண்ணாடியைப் போலும், இறைவனுடையமகிமையைப் பிரதிபலித்துச் சத்துப்பொருளாகிய இறைவனைப்போல அவன் மகிமைஉருவோடும் மீண்டும் மீண்டும் ஒன்றுகின்றோம்."

அதைப் பின்வருமாறு விரிக்கிறார். "பளிங்கைப் போலும், நாமெல்லாம் கிறிஸ்துநாதரின்குணாதிசயங்களை விளக்கி, அவர் உருவைப் பையப்பைய அடைகிறோம்; அற்பகுணத்திலிருந்து அதற்கு உயர்ந்தகுணத்தையும், அதனினின்று அதற்குமேலான குணத்தையும், அதற்குமேலும் பூர்ணகுணத்தையும் அடைந்து, கடைசியாக, அவன்முழு உருவையும் பெறுகின்றோம். ஆகவே, முக்திசாதனத்தை ஒருவரியில் அடக்கலாம். கிறிஸ்துவின் குணத்தைப் பிரதிபலி. நீ கிறிஸ்துபோல் ஆவாய்" அல்லது நாம்சொல்லுகிறபடி, கடவுளின்உருவை உன்னிடத்திற்பதியவை. நீ கடவுளைப் போல் ஆவாய். நீ கடவுளாவாய்.

ஆனால் யாங்ஙனம், அற்பகுணம், மேலும்மேலும் நற்குணமாவது? அல்லது கண்ணாடியிற்பதிந்த உருவம் மேலும்மேலும் தெளிவது? ஆன்மாவாகிய பளிங்கை அழுக்கற மேலும்மேலும் துலக்கி, பரஞ்சோதியின்நேராகக்கொண்டுவருவதினால்தான். ஆக அதுமுற்றும் சுத்தமாகத் துலக்கப்பட்டபின்னும், சோதிக்கு அணுகி நேர்ந்த பின்னும் அதனுட்பதிந்தசோதி ஒப்பற்றஒளியாம். அதனை முற்றும் கவர்ந்து, அதனைமறைத்து, அப்பாலொளியே அநுபவசித்தமாகின்றது. அப்பண்டிதரும் உண்மையில் உரைக்குமாறு, "சாதனசித்திஉண்மையாயின், நீ உணர்வதும் இறைவனுடையமகிமையே. ஒரு கண்ணாடியை ஒருவன் பார்க்கும்போது, அந்தக்கண்ணாடியைப் பார்ப்பதுமில்லை நினைப்பதுமில்லை; அதில் என்ன ஒளிர்கின்றதோ அதனையே பார்க்கின்றான். ஏனெனின், பளிங்கிற் குற்றமிருந்தாலொழிய அதனிடம் நம்கவனம்பதிவதில்லை." இக்குற்றங்களும்,சித்தாந்திகளுடைய பாசமாகிய பலவன்னங்களே. உடலோடுபொருந்தியபோது உடல்தான் காட்சி. பளிங்குபோலும் உயிரன்று. இறைவனுடன்கலந்தபோது, இறைவனுடையமாட்சியும், நிர்மலப்ரகாசமுமே காட்சி. பளிங்குபோலும் ஆன்மாவல்ல. அப்பண்டிதர் பகர்வதும், "எல்லா மனிதர்களும் கண்ணாடிகள், இதுதான் முக்திசாதனம் அல்லது பந்தசாதனத்தின் முதல்விதி; மனிதனுக்கு மிகவும்நேர்ந்த உபமானமாகக் கிடைத்திருப்பது, அவன் கண்ணாடிபோன்றவன் என்பது." அந்த நூலை முற்றும்பார்க்க எவ்வளவுஅழகாய் இதனைவிரித்திருக்கிறாரென்பது வெளிப்படும்.

அவர் இரண்டாவதுவிதியாகக்கூறுவதும் அதுவதுவாதல், அல்லது தாதாத்மியமாதலே. அதுவதுவாதல் இரண்டாவதுவிதி. “இது முக்திசாதனத்துக்கு முக்கியஅடிப்படை. மனிதர் வெறுங்கண்ணாடிகளல்லர். இக்கண்ணாடி தன் எதிர்ப்பட்டதைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், தான் பிரதிபலித்ததை, தன் உள்ளுக்குள் உள்ளாக்கி, தான் அதுவாய், அதனை என்றும்விடாமல், பற்றிக்கொண்டே நிற்கின்றது. எங்ஙனம் இவ்வான்மா அவற்றைப்பற்றிக்கொண்டிருப்பதென்பதும், இவ்வித அற்புதம் எங்ஙனம் விளைகின்றதென்பதும் நமக்குப்புலப்படவில்லை. இயற்கைத் தோற்றங்களில் எதுவும், ரசாயனப் பரீக்ஷையில் எதுவும், மாந்திரிகதந்திரங்கள் எதுவும் இவ்வதிசயத்தை விளக்குவதில்லை. பாருங்கள், இறந்தகாலநிகழ்ச்சியெல்லாம் அவனிடம்பிரதிபலிப்பதுமல்லாமல், எல்லாம் அவனிடத்தேயுள்ளனவாகின்றன. உள்ளதன்றேல் யாங்ஙனம் தோற்றும். அவன் இதுவரை இப்பூவுலகின்கட் கண்டதும், கேட்டதும், உணர்ந்ததும் நம்பியதும் அவனுள்ளே இப்பொழுது குடிகொண்டிருக்கின்றன. அவன்பகுப்பாய் ஆய்விட்டன, பாதிஅவனே ஆகின்றான். அவன் அவ்வுருவாயினான்.”

பண்டிதர்விதிகளை அநுசரித்து, சாதனமார்க்கத்தைப் பின் வரும்வாய்பாட்டினால் உரைக்கலாம். “நான் சிவத்தைப்பார்த்தேன். நான் சிவத்தைத்தோற்றுவித்தேன். சிவம்போல்ஆனேன். நான் சிவமானேன்.”

இவற்றையெல்லாம்தொகுத்து ஒருவிருத்தத்திலேயமைத்து உண்மையுரைத்த உயர் அருணந்திசிவாசார்யசுவாமிகளின் உன்னத பாதங்களை எம் உளத்திலும் சிரத்திலும் பொருத்தி இந்நூலை முடிவுசெய்வாம்:

“கண்டவிவையல்லேனானென்றகன்றுகாணக்
கழிபரமுநானல்லேனெனக்கருதிக்கசிந்த
தொண்டினொடுமுளத்தவன்றானின்றகலப்பாலே
சோகமெனப்பாவிக்கத்தோன்றுவன்வேறின்றி
விண்டகலுமலங்களெல்லாம்கருடதியானத்தால்
விடமொழியுமதுபோலவிமலதையுமடையும்
பண்டைமறைகளுமதுநானானேனென்று
பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே.”

சந்தானகுரவர்கள்பொற்றாள்வாழ்க.

ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை, B.A., B.L.,

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

பதினான்காம் வருஷோத்ஸவகாலத்தில்

## புரொபஸர் ஜே. ஸி. போஸ் அவர்கள்

விஜயஞ்செய்தபோதுகூறிய

# மங்களவாழ்த்து.

---

### ஆசிரியவிருத்தம்.

பூமகட்கொருமுகமெனச்சிறப்புற்றமரர்பொன்னுலகும்இருநிதிக்கோன்
புரியுமல்லாதுபுவிதனிலிணையிலாதிந்த்ரபோகமுடன்வீற்றிருக்கும்
புண்ணியசிரேட்டரைத்தன்னகத்துடையதாய்ப்புந்திமிக்கோர்துதிக்கும்
பொற்புமிகுவங்காளநாட்டில்சந்தேசம்புரிந்தகோன்பாலுதித்துப்

பாமகட்கொருபீடமென்னமேதக்கலைபயின்றறிஞர்பரவுநல்லோர்
பயிலும்வங்காளத்திலுயர்தரகலாசங்கபதியாகியூரோப்புடன்
பன்னலமிகுத்தஅமெரிக்காவிலுங்கிரணபாநுவெனஇசையைநாட்டிப்
பரதகண்டத்திறல்விளக்கியிந்தியதேசபாஷாபிமானமிக்க

மாமகத்துவமேவுஜகதீசசந்த்ரபோஸ்வள்ளால்! இம் மதுரைமூதூர்
வளர்தமிழ்ச்சங்கமாமகவுயிர்த்தாள்கருணைமன்னுபாண்டித்துரைக்கோ
மாகனகமழகிலனையமழக்வையெந்சேதுபதிமகாராஜன் ராஜராஜேச்
வரமுத்துராமலிங்கக்குரிசில்அம்மசவைவாடாதுகாப்பலென்றக்

கோமகன்எழிற்கங்கணங்கட்டினன்வாய்மைகொண்டசாமிக்கண்ணனுங்
குரிசில்இவ்வருடஞ்சபைத்தலைவனாகிமகிழ்கூர்வித்தனன்சிறப்புக்
கொளலுற்றநின்வரவுநல்வரவதாகவேகொள்ளக்கிடைத்தபேற்றாற்
கூறுமிச்சங்கமுயர்வாழ்வுமேவியதெனக்குதகலித்திடுவம்யாமே.

நல்லசிவன்பிள்ளை.